ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

# தி கோவை மெயில்

வாழ்க வையகம் — வாழ்க வளமுடன்

தமிழ் & ஆங்கில வார இதழ்

Sree Annapoorna
Sree Gowrishankar
The pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 40 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, டிச 31, 2023 - ஜன 6, 2024, 8 பக்கங்கள், ₹5/- | ஆண்டு சந்தா - ₹260/-



### விவசாயம், தொழிற்சாலை, கல்வி ஆகியவற்றில்

# ஆற்றல் மிக்க தலைவர் விருது பெற்ற டி.எஸ்.ஆர் கண்ணையன்!

✍ தி கோவை மெயில்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அங்கு இயங்கும் தொழில் நிறுவனங்களை பொருத்தே அமைகிறது. ஒரு தொழில் நிறுவனத்தின் வளர்ச்சி அந்த தேசத்தின் பொருளாதார வளர்ச்சியோடு தொடர்புடையதாக இருக்கிறது. தொழில் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து தனக்கான பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது என்பது ஒரு வகை, அதை மேலும் விரிவு படுத்தி தொழிற்சாலையாக்கி பலருக்கு வேலை வாய்ப்பை கொடுத்து பொருளாதாரத்தை மேலும் பெருக்குவதுதான் ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு அடி கோள்கிறது. அவ்வாறு இயங்கும் பல நிறுவனங்களின் உழைப்பினால் அது சார்ந்திருக்கும் பகுதி குறிப்பிட்ட அடையாளத்தை பெறுகிறது.

கோவை நகரில் ஏற்கனவே இருக்கும் தொழில் முனைவோரை தொடர்ந்து கோவையைச் சுற்றிய கிராமப்புறங்களில் இருந்து தொழில் ஆர்வம் கொண்ட பலருடைய உழைப்பும் இந்த வளர்ச்சிக்கு பின்னால் இருக்கிறது. கொங்கு பகுதியில் விவசாய பின்னணி கொண்ட மண்ணின் மைந்தர்களுள் டி.எஸ்.ஆர் கண்ணையன், வாழ்வும் வளர்ச்சியும் கோவையின் அதிவேக வளர்ச்சியில் தனக்கான இடத்தை பிடித்திருக்கிறது.

திருச்செங்கோட்டில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து தன் சொந்த முயற்சியால் தொழில் நிறுவனங்களை உருவாக்கிய இவர் பலருக்கு வேலை வாய்ப்பை கொடுத்து கோவையின் பொருளாதார வளர்ச்சியில், அடித்தளமாக பங்கு கொண்டிருப்பது உண்மையிலேயே வியப்பாக இருக்கிறது.

கோவையின் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழும் ஹிந்துஸ்தான் குழுமங்களின் தலைவர் டி.எஸ்.ஆர் கண்ணையன், உழைப்பும் உயர்வும் இக்கால இளைஞர்களுக்கு வாழ்க்கை பாடமாய் இருக்கிறது. இதை அங்கீகரிக்கும் விதமாக ET எஸ்சலன்ஸ் 2023 'ஆற்றல் மிக்க தலைவர்' என்ற விருதினை அனிதா டெக்ஸ்காட் சார்பில் கொடுத்து கௌரவத்திருப்பது வரவேற்கக் கூடிய ஒன்று.

திருச்செங்கோட்டில் விவசாயத்திற்காக பயன்படும் பம்ப்செட்டுகளின் இயக்கத்திற்காக மெக்கானிக்களை நம்பிக் கொண்டிருந்த காலத்தில் தனது விளை நிலத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார்களை தானே சரி செய்வதில் துவங்கியது இவருடைய தொழில் ஆர்வம். தனது சொந்த ஆர்வத்தினால் பம்ப் செட்டுகளில் இயக்கங்களை அறிந்துகொண்டு தான் பெற்ற அனுபவத்தால் 1974ல் பம்ப் செட் உற்பத்திக்கான பாகங்களை தயாரிக்கும் தொழிலில் கால் பதித்தார் டி.எஸ்.ஆர்.கண்ணையன். அடுத்த ஐந்து ஆண்டுகளிலேயே மின் உபகரண தயாரிப்பில் நுட்பங்களை புரிந்து கொண்டு அதற்கான இயந்திரங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்.

அதற்கான, துவக்கமாக 1979ல் மின் மாற்றிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கோவையில் துவக்கினார். வெறும் 50 பேர்களைக் கொண்டு 500 கிலோ வாட் கொண்ட மின் மாற்றி இயந்திரங்களை தயாரிக்கும் நோக்கோடு துவக்கப்பட்ட இந்த சிறிய தொழிற்சாலை வேகமாக வளர்ச்சி அடைந்து பத்து மெகாவாட் திறன் கொண்ட மின் மாற்றிகளை உருவாக்கும் நிறுவனமாக வளர்ந்தது. இதன் தரத்தையும் செயல்படும் திறனையும் கண்ட தமிழ்நாடு மின்சாரத்துறை இவரிடமே டிரான்ஸ்பார்மர்களை பெறுவதற்கு ஆர்வம் காட்டியது. இதனால் மேலும் ஐந்து உற்பத்தி தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன கோவையில் மட்டுமல்லாது பாண்டிச்சேரியிலும் கிளைகள் பரவினது அடுத்த 10 ஆண்டுகளில் அதாவது 1990களின் துவக்கத்தில் இவருடைய உழைப்பால் உயர்ந்த தொழிற்சாலைகளை ஒருங்கிணைத்து ஹிந்துஸ்தான் குழுமம் உருவாக்கப்பட்டது.

இதே காலகட்டத்தில் இந்துஸ்தான் அறக்கட்டளை அமைக்கப்பட்டு இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக தனது பங்களிப்பை வழங்கிட கல்வி நிறுவனங்களை துவக்கினார்.

கோவையை தொழில் நகரம் மட்டுமல்லாது உயர்கல்வியின் மையமாய் விளங்குவதற்கு இந்துஸ்தான் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட உலகத் தரத்திற்கு இணையான 12க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் ஒரு காரணமாய் இருக்கின்றன. இந்துஸ்தான் குழுமத்தில் அங்கங்களான இந்துஸ்தான் ஹெவி எலக்ட்ரிகல் பிரைவேட் லிமிடெட் *(Hindusthan Heavy Electricals Private Limited)*, ஸ்டாண்டர்ட் பவர் டிஸ்ட்ரிபியூட்டர் *(Standard Power Distributors)*, பிரியா மெட்டாலஜிக்கல் இண்டஸ்ட்ரீஸ் *(Priya Metallurgical Industries)*, இந்துஸ்தான் ரேடியேட்டர்ஸ் *(Hindusthan Radiators)*, ஹிந்துஸ்தான் டிரான்ஸ்பார்மர் இன் ஆயில் ப்ராடக்ட்ஸ் *(Hindusthan Transformers and Oil Products)*, விவின் கண்ட்ரோல்ஸ் பிரைவேட் லிமிடெட் *(Vivin Controls Private Limited)*, விவின் இண்டஸ்ட்ரீஸ் *(Vivin Industries)*, இந்துஸ்தான் எஸ்டேட் *(Hindusthan Estates)*, இந்துஸ்தான் டிஸ்டிலரீஸ் (கர்நாடகா) பிரைவேட் லிமிடெட் *(Hindusthan Distilleries ( Karnataka ) Private Limited)*, இந்துஸ்தான் ஹாஸ்பிடல் *(Hindusthan Hospital)*, இந்துஸ்தான் பைப்ஸ் & டியூப்ஸ் *(Hindustan Pipes and Tubes)* இந்துஸ்தான் ட்ராவல்ஸ் *(Hindusthan Travels)*, இந்துஸ்தான் வே பிரிட்ஜ் *(Hindusthan Weigh Bridge)*, *(Hi-Basket)* போன்ற நிறுவனங்கள் வளர்ந்து கோவையின் பொருளாதார வளர்ச்சியில் தன்னுடைய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறது. மேலும் இந்துஸ்தான் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூஷன்ஸ் *(Hindusthan Educational Institutions)* கோவையின் உலகளாவிய கல்வி வாசலுக்கான ஓர் சரணாலயமாய் வளர்ந்து கொண்டிருக்கிறது.

தொழில் நிறுவனங்களை உருவாக்கி வளர்ச்சி அடைந்த நிலைக்கு கொண்டு சென்றதில் டி.எஸ்.ஆர்.கண்ணையனின் உழைப்பு இருப்பதைப் போல கல்வி நிறுவனங்களை தனது தனித்துவமான அணுகு முறையினால் நிர்வகித்து வருவதும் சரஸ்வதி கண்ணையன் மற்றும் அதனை உலக தரத்திற்கான நிலைக்கு கொண்டு செல்ல தொலைநோக்கு பார்வையோடு இயங்கிக் கொண்டிருக்கும் பிரியா ஆகியோரின் பங்களிப்பையும் இந்துஸ்தான் குழுமத்தின் வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாது.

இந்துஸ்தான் கல்வி நிறுவனங்கள் துவக்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில் ஊடகத் துறையை அறிமுகப்படுத்தி கோவை நகரிலேயே அதிநவீன வசதி கொண்ட துறையாக உருவாக்கிய பெருமை இந்துஸ்தான் அறக்கட்டளையின் அப்போதைய துணை அறங்காவலர் சக்திவேல் கண்ணையனை சாரும். சென்னையில் இருந்து வரும் சினிமா துறையினருக்கு உறுதுணையாக இருக்கும் தனித்துவம் வாய்ந்த துறையாக ஊடகத்துறையை மாற்றியதன் மூலம் இக்கல்வி நிறுவனத்தின் புகழுக்கு அடித்தளம் இட்டார் சக்திவேல். ஊடகத்துறை என்றாலே இந்துஸ்தான் கல்லூரியின் பெயர் சொல்லும் அளவிற்கு இன்றளவும் பேசப்படுகிறது. வளர்ந்து வரும் கணினி தொழில்நுட்பத்தின் தேவைக்கிணங்க புதிய கணினிசார் துறைகளை அறிமுகப்படுத்துவதில் ஹிந்துஸ்தான் கல்வி அறக்கட்டளையின் செயலர் பிரியா எடுத்து வரும் முயற்சிகள் கல்வித் துறையில் மேலும் பல படிக்கட்டுகளை எதிர்கால சந்ததிக்கு உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.



இந்துஸ்தான் குருப் ஆஃப் கம்பெனியின் நிறுவனர் மற்றும் தலைவர் டி.எஸ்.ஆர்.கண்ணையனுக்கு 'ஆண்டின் ஆற்றல்மிக்க தலைவர் 2023' என்ற விருது வழங்கப்பட்டது. உடன், இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன்.

ஒரு தனி மனிதரின் தொழில் ஆர்வம் அயராத உழைப்பு ஒரு நகரின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதோடு சமுதாய முன்னேற்றத்திற்கான கல்வி நிறுவனங்களுக்காகவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த மனிதரின் உழைப்பிற்கு பக்க துணையாக இருந்து வளர்ச்சிப் பாதைக்கு திசையை காண்பிக்கும் சரஸ்வதி கண்ணையனின் பங்களிப்பும் அதில் இணைந்தே இருக்கிறது. இந்த நீண்ட பயணத்தை அங்கீகரிக்கும் விதமாகவே இப்போது இவர் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு கிடைத்திருக்கும் விருது உழைப்பின் மேல் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு உந்து சக்தியை கொடுக்கிறது.

ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து எந்த பின்னணியும் இல்லாது தன்னுடைய உழைப்பை மட்டுமே மூலதனமாக்கி பலரது வாழ்வில் ஒளி ஏற்றும் விதமாக ஏறத்தாழ 5,000 தொழிலாளர்களைக் கொண்ட பெரும் நிறுவனமாக ஹிந்துஸ்தான் குழுமத்தை வளர்த்தெடுத்திருக்கிறார் டி.எஸ்.ஆர்.கண்ணையன்.

தன் உழைப்பால் உயர்ந்த இவர் மேலும் பல விருதுகள் வாங்கிடவும் கோவையின் வளர்ச்சி உலகத்தின் கவனத்தைப் பெற்றிடவும் உயர்ந்திடவும் 'தி கோவை மெயில்' எப்பொழுதும் தன் ஆதரவை முன் வைக்கும்.




கேம்பிரிட்ஜ் பாடத் திட்டத்தின் கீழ் செயல்படும் இந்துஸ்தான் சர்வதேச பள்ளிக்கு அனிதா டெக்ஸ்காட் சார்பில் E.T. எக்ஸலன்ஸ் கோயம்புத்தூர் 2023 விருது நிகழ்வில் *'Excellent School for Futuristic Education'* எனும் விருது வழங்கப்பட்டது. இதனை இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளையின் செயலாளர் பிரியா சதிஷ் பிரபு பெற்றுக்கொண்டார். உடன், பள்ளி முதல்வர், ஜி.சுஜா நாயர்.

> **" ஒரு தனி மனிதரின் தொழில் ஆர்வம், அயராத உழைப்பு ஒரு நகரின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதோடு சமுதாய முன்னேற்றத்திற்கான கல்வி நிறுவனங்களுக்காகவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.**



# கோவையின் ஷீரடி

## ரூ.500ல் சத்யநாராயண பூஜை



ஆனந்த சாய் பாபா



சத்யநாராயண பூஜை



பூஜையில் கலந்துகொண்ட பக்தர்கள்

✍ **வெ.சீ.அனிஷா,** தி கோவை மெயில்

தனது பக்தர்களின் பிரார்த்தனைகளில் பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தி, அவர்களின் துன்பங்களை நீக்கி நல்வாழ்வை அருளும் பீளமேடு ஸ்ரீ ஷீரடி ஆனந்த சாய்பாபா திருக்கோவிலில் மாதந்தோறும் பௌர்ணமி நாளில் சத்யநாராயண பூஜை மிக சிறப்பாக நடைபெறுகிறது.

கோவை பீளமேட்டில் உள்ள கல்கி நகரில் 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்ரீ ஷீரடி ஆனந்த சாய் பாபா திருக்கோவில் அமைந்துள்ளது. இதன் நிர்வாக அறங்காவலரான ராஜலக்ஷ்மி இக்கோவிலை 10 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். இக்கோவில், நாளுக்குநாள் தொடர்ந்து அதிகரித்துவரும் பக்தர்களின் எண்ணிக்கையால், "கோவையின் ஷீரடி" எனப் போற்றப்படும் இடமாக அமைகிறது.

இத்திருக்கோவிலில் நுழைந்தவுடன் ஷீரடியில் இருப்பதைப் போலவே பாபாவின் துனி, துவராகமாயி, தத்தாத்ரேயர், நந்தா தீபம் ஆகிய அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. மூல ஸ்தானத்தில் அழகிய ஆனந்த முகத்துடன் வீற்றிருக்கும் ஸ்ரீ ஷீரடி ஆனந்த சாய் பாபா மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்கிறார்.

பாபாவிற்கு காலையில் காகட ஆரத்தி, அலங்கார ஆரத்தி, மதிய ஆரத்தி, மாலையில் தூப ஆரத்தி, இரவில் சேஜ் ஆரத்தி என தினந்தோறும் 5 வேளை பூஜை ஆரத்தி நடைபெறுகிறது. வியாழக்கிழமைதோறும் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்புரிகிறார்.

### பாபாவின் துனி:

இங்கு அமைந்துள்ள பாபாவின் துனியில் பக்தர்கள் தங்கள் பிரார்த்தனைகளையும் கோரிக்கைகளையும் அக்னி குண்டத்தில் சமர்ப்பித்து, வாழ்வில் நலமுடன் வாழ ஸ்ரீ ஷீரடி ஆனந்த சாய் நாதரை வழிபடுகின்றனர். அதிலே, மட்டைத் தேங்காய் (கொப்பரை), நவதானியம், ஓமக்குச்சி, அவல், நெல் மலர் மற்றும் நைவேத்தியங்கள் உலர்ந்த பழங்கள், கல்கண்டு, சப்பாத்தி, பழங்கள், பிஸ்கட் மற்றும் பல அக்னி குண்ட பொருட்களை துனியில் பாபாவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

### சத்யநாராயண பூஜை பலன்கள் :

சத்யநாராயண என்பது மஹா விஷ்ணுவின் மிகவும் புகழ்பெற்ற அவதாரங்களில் ஒன்றாகும். இப்பூஜையை பக்தியுடன் செய்பவர்களின் சகலவிதமான கஷ்டங்களும் தடைகளும் நிவர்த்தியடையும் என்பது நம்பிக்கை. மக்கள் தங்களின் கடுமையான இருப்பிலிருந்து வெளியேறுவதற்கு சத்யநாராயண பூஜை செய்து வழிபடுகின்றனர். இதனை செய்வதால், பக்தர்கள் குலதெய்வத்தின் அருள் பெற்று,வாழ்வில் துன்பங்கள் நீங்கி, செல்வம், தொழிலில் வளர்ச்சி அடைந்து, குழந்தை பாக்கியம் பெறுவது போன்ற ஏராளமான பலன்களைப் பெற முடிகிறது.

அந்தவகையில் இத்திருக்கோவிலில் மாதந்தோறும் பௌர்ணமி நாட்களில் இந்த பூஜை நடைபெறுவது வழக்கம். இப்பூஜையில் பக்தர்கள் அவர்களே தனித்தனியாக பூஜை செய்யும் வகையில் மிகவும் சிறப்பாக இந்த கூட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது. இதற்கு கட்டணமாக ஒருவருக்கு 501 மட்டுமே வசூலிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### பிரதோஷ வழிபாடு:

சிவனின் அவதாரம் எனச் சொல்லப்படும் ஸ்ரீ ஷீரடி ஆனந்த சாய் பாபாவின் எதிரில் நந்தி பகவான் வீற்றிருக்கிறார். மாதந்தோறும் பிரதோஷ நாட்களில் நந்தி பகவானிற்கு சிறப்பு அபிஷேக அலங்கார பூஜை நடைபெறுகிறது. அதோடு, அமாவாசை அன்னதான வழிபாடும் இடம்பெறுகிறது.

### பாபா என்றாலே அன்னதானம்:

ஆனந்த சாய் பாபாவை வணங்க வருவோருக்கு கோவிலின் நிர்வாகம் சார்பாக தினமும் பிரசாதம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமின்றி பாபாவிற்குரிய நாளான வியாழக்கிழமை சிறப்பு அன்னதானமும் வழங்கப்படுகிறது.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் பாபாவை வணங்குவதால், பக்தர்களின் குறைகள் நிவர்த்தியாவதைக் கண்கூடாகப் பார்க்க முடிவதாகவும், அவர்களின் வாழ்வில் அற்புதங்கள் பல நிகழ்வதாகவும் கூறப்படுகிறது. அந்தவகையில் இங்கு வரும் பக்தர்கள் ஆனந்த சாய்பாபாவின் ஈர்ப்பையும், அவரது அருளாசியையும் பெற்றுச் செல்கின்றனர். மேலும், புத்தாண்டை வரவேற்கும் விதமாக இன்று இரவு 12.00மணிக்கு புத்தாண்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகா தீபாராதனை நடைபெறவுள்ளன. இதை தொடர்ந்து பாபாவின் புத்தாண்டு பிரசாதமாக அனைவருக்கும் உதி,நாணயம்,காலண்டர், பாபாவின் திருவுருவப்படம் மற்றும் லட்டு பிரசாதம் வழங்குவதோடு, இரவு முழுவதும் சிறப்பு ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

**மனிதர்களிடம் பிரச்னையைக் கூறாதீர்கள்... பிரச்னையிடம் சென்று கூறுங்கள், என்னுடன் பாபா இருக்கிறார் என்று...**



## வீர தீர சாகசங்கள்



கோவை குருடம்பாளையத்தில் உள்ள CRPF மத்திய பாதுகாப்பு காவல் படையினரின் 95வது படை குழுவின் பயிற்சி முடிந்து பணி நியமன ஆணை வழங்கும் விழா நடந்தது, 263 போலீசாருக்கு பதவிகளை மத்திய பாதுகாப்பு படை துணை இயக்குனர் தீபக் குமார் பதவி பிரமாணம் செய்து வைத்தார், மற்றும் போலீசாரின் வீர தீர சாகசங்கள் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது. படம்: ராஜ்குமார்

## 'தொடங்கியது' கோவை- பெங்களூர் வந்தே பாரத்



கோவையில் இருந்து பெங்களூர் உட்பட 6 வழித்தடங்களில் புதிய வந்தே பாரத் ரயில்களை பிரதமர் மோடி அயோத்தியில் இருந்து தொடங்கி வைத்தார். கோவை பெங்களூரு இடையே வந்தே பாரத் ரயில் தினமும் இருமுறை இயக்கப்பட உள்ளது. கோவையில் காலை 5 மணிக்கு புறப்படும் இந்த ரயில் பெங்களூரை பகல் 11.30 மணிக்கு சென்று அடைகிறது. மறுமாபக்கத்தில் நண்பகல் 1.40 மணிக்கு பெங்களூரில் இருந்து புறப்படும் இந்த ரயில் கோவையை இரவு 8 மணிக்கு வந்து அடைகிறது. கோவை பெங்களூரு இடையிலான 380 கிலோ மீட்டர் தூரத்தை வந்தே பாரத் ரயில் 5 மணி நேரம் 40 நிமிடங்களில் சென்றடைகிறது.

## ராம்ராஜ் காட்டன் சிறப்பு சலுகை

# ரூ.500க்கு 3 வேட்டிகள்







5 ரக வேட்டிகளை வெளியிடும் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் நாகராஜன். உடன், (இடமிருந்து) ரெடிமேட்ஸ் பிரிவின் தலைமை செயல் அதிகாரி செல்வ குமார், நிர்வாக இயக்குநர் அருண் ஈஸ்வர், துணை நிர்வாக இயக்குநர் அஷ்வின், கைத்தறி பிரிவின் தலைமை செயல் அதிகாரி கணபதி.

தி கோவை மெயில்

ராம்ராஜ் காட்டனின் வேட்டி வாரக் கொண்டாட்டம் வருகின்ற ஜனவரி 1 முதல் 7 ஆம் தேதி வரை கொண்டாடப்படவுள்ளது.

தமிழக அரசால் கடந்த 2015 ஆம் ஆண்டு, ஜனவரி 6ம் தேதி தொடங்கி வைக்கப்பட்ட வேட்டி தினத்தை ராம்ராஜ் வேட்டி வாரமாகக் கொண்டாடி வருகிறது. வேட்டிக்கு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுத் தந்து ராம்ராஜ் காட்டன், ஜனவரி 1 முதல் 7 ஆம் தேதி வரை வேட்டி வாரம் கொண்டாடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது ரகங்களை அறிமுகப்படுத்தி, இந்தியக் கலாச்சார உடையான வேட்டியின் உபயோகம் பெருமளவில் உயர ராம்ராஜ் எல்லா முயற்சிகளையும் முன்னெடுத்து வெற்றி பெற்று வருகிறது.

இது குறித்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் நாகராஜன், 'இந்த வேட்டி வாரத்தின் முக்கிய நோக்கமே தமிழக கிராமப்புறங்களில் உள்ள நெசவாளர்களின் வாழ்வாதாரம் உயரவும், தமிழர்களின் அடையாளமான வேட்டியினை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக வேட்டி வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது ரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். அந்த வரிசையில், 2024 ஆம் ஆண்டில், அனைத்து வயதினருக்கும் ஏற்றபடி 5 ரக வேட்டிகளை அறிமுகப் படுத்துகிறோம். 3 வேட்டிகள் கொண்ட காம்போ பேக் ரூபாய் 500க்கு விற்பனைக்கு வருகிறது. மேலும் இவ்வருடம் கூடுதல் சலுகையாக 3 சிங்கிள் பேன்சி பார்டர் வேட்டிகள்ரூ.500, 3 சிங்கிள் பெரிய பார்டர் வேட்டிகள்ரூ.500, 2 சிங்கிள் பேன்சி பார்டர் வேட்டிகள்ரூ. 500, 2 டபுள் பேன்சி பார்டர் வேட்டிகள் ரூ.600 மற்றும் 2 பஞ்சகச்சம் ரூ990 ஆகியவையும் விற்பனைக்கு வருகின்றன' என்றார்.

வேட்டி கட்டியவர்களே மதிப்பு மிக்கவர்கள் என சல்யூட் அடிக்க வைத்த சாதனையாளர் ராம்ராஜ் நிறுவனர் நாகராஜன், கிராமப்புற நெசவாளர்களின் வாழ்க்கையை மேம்படச் செய்து காந்தி கண்ட கனவினை நனவாக்கிட அனைத்து தரப்பினரும் உபயோகிக்கும் வண்ணம் ஆராய்ச்சிகள் பல செய்து 41 ஆண்டுகளாகத் தனித்துவம் மிக்க உடையாக வேட்டியை அதன் விற்பனையை மேம்படுத்தி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குரு பூஜை



கோவை பெரியநாயக்கன்பாளையம், கூடலூர் கிராமம் செல்வபுரத்தில் உள்ள ஸ்ரீ தன்னாசி ஈசர் என்னும் புண்ணாக்கீசர் கோவிலில் 51வது குரு பூஜை, ஆருத்ரா அபிஷேகம் மற்றும் ஆருத்ரா தரிசனம் புதன்கிழமை நடைபெற்றது.

## உடல் கட்டமைப்புப் போட்டி

தி கோவை மெயில்

பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையே ஆண்களுக்கான சிறந்த உடல் கட்டமைப்புப் போட்டி இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

27 கல்லூரிகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். அதன்வகையில் இந்துஸ்தான் கல்லூரி 90 புள்ளிகளுடன் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் வென்றது. பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, ஸ்ரீ வெங்கடேஷ்வரா கலை அறிவியல் கல்லூரி அணிகளும் சிறப்புப் புள்ளிகளைப் பெற்று வென்றனர்.

அதேபோல், இரத்தினம் கலை அறிவியல் கல்லூரியின் பிரவின்ராஜ், பாரதியார் பல்கலைக்கழக அளவிலான பட்டத்தையும், ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரியின் கார்த்திகேயன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட அமெச்சூர் பாடிபில்டர் அமைப்பின் இயக்குநர் வினோத் கலந்துகொண்டார். பாரதியார் பல்கலைக்கழக உடற்கல்வித் துறையின் பொறுப்பு இயக்குநர் ராஜேஸ்வரன், இந்துஸ்தான் கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, உடற்கல்வி உதவி இயக்குநர் ஜீவா, உடற்கல்வி இயக்குநர் கருணாநிதி மற்றும் பல்வேறு கல்லூரிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டினர்.

## நிறுவனங்களுக்கு இடையிலான கபடி போட்டி




கே.பி.ஆர். மில்லில் பழனிச்சாமி கவுண்டர் செல்லம்மாள் நினைவு கோப்பைக்கான கபடி போட்டி நடைபெற்றது. இதில் கே.பி.ஆர் பொறியியல் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி நடராஜன், ஏஎஸ்பி ஆறுமுகம், பொறியியல் கல்லூரி முதல்வர் ராமசாமி, கே.பி.ஆர்.மில் துணைத்தலைவர் சோமசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்போட்டியில், சத்தியமங்கலம், நீலாம்பூர், அரசூர், கருமத்தம்பட்டி, குவாண்டம் நிட்ஸ், கே.பி.ஆர். மில் லிமிடெட் ஆடை பிரிவு, குவாண்டம் நிட்ஸ் 3, செங்கப்பள்ளி யூனிட், அவனீதா மில் ஆகிய 9 அணிகள் பங்கேற்றனர்.




# சினிமா, அரசியலில் சாதித்த சாமானியன்



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

**தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா என்ற வாசகத்தை பட்டிதொட்டியெல்லாம் பரப்பி தனது தமிழ் தேசியக் கருத்தை மக்கள் மனதில் விதைத்தவர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான பற்றால் தனது மகனுக்கு விஜய பிரபாகரன் என பெயர் சூட்டி விடுதலைப் புலிகள் மீதான உண்மையான பற்றை பறைசாற்றியவர்.**

தமிழகத்தில் சினிமா, அரசியல் என இரண்டிலும் சாதனை படைத்தவர் மறைந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் என்றால் அது மிகையல்ல.

ரஜினிகாந்த், கமல்ஹாசன் என இருபெரும் ஈர்ப்பு சக்திமிக்க ஹீரோக்கள் தமிழ் சினிமாவில் வலம் வந்தபோது அவர்களுக்கு அடுத்தப்படியாக மக்களால் கொண்டாடப்பட்ட சாமானியன் தான் விஜயகாந்த். எம்ஜிஆர் போல இயற்கையாகவே ஈகை குணம் கொண்ட விஜயகாந்த் திரைப்படங்களிலும் எம்ஜிஆரை போல கதாபாத்திரங்களில் நடித்ததை பார்த்து பாமர மக்கள் ரசித்து அவரை கருப்பு எம்ஜிஆராகவே தங்கள் மனதில் வைத்து கொண்டாடினர்.

தென்னிந்திய அளவில் ரஜினி, கமல் என சிறந்த நடிகர்களில் முதல் இரண்டு இடங்களை பிடித்தாலும், தமிழக அளவில் ரஜினிக்கு அடுத்து இரண்டாம் இடத்தை பிடித்தவர் கமல்ஹாசன்.

எம்ஜிஆர், சிவாஜி ஆகியோரால் முடியாத இலக்காக இருந்த நடிகர் சங்கக் கடனை தீர்க்க பல்வேறு கலைநிகழ்ச்சிகளை வெளிநாடுகளில் நடத்தி வெற்றி கண்டு கடன் முழுவதையும் அடைத்தவர். கடன் அடைத்ததுபோக மீதமிருந்த பணத்தை வைத்து நடிகர் சங்க கட்டடம் கட்ட முயற்சி எடுத்தவர். இதுவே விஜயகாந்தின் நிர்வாகத் திறனுக்கு மிகச்சிறந்த உதாரணம்.

எந்த நடிகரும் செய்யாத விஷயமாக, தனது திரைப்படங்களில் புதுமுக இயக்குநர்களுக்கு வாய்ப்பு அளித்த மகான் தான் விஜயகாந்த். தான் தயாரித்த திரைப்படங்களில் புதுமுக நடிகர், நடிகைகளுக்கு வாய்ப்பு அளித்து ஏணியாக விளங்கியவர் விஜயகாந்த். வளர்த்த கிடாக்கள் மார்பில் பாயும் என்பது போல பின்னாளில் அவர் வாய்ப்பு கொடுத்து வளர்த்தவர்களே சினிமாவிலும், அரசியலிலும் அவருக்கு துரோகம் செய்தனர் என்பது கசப்பான உண்மை.

அரை நூற்றாண்டாக தமிழகத்தில் திமுக, அதிமுக என மாறி மாறி அரசியல் சக்கரம் சுழன்ற நிலையில் 2006 பேரவைத் தேர்தலில் தேமுதிகவுக்கு 8.3 சதவீத வாக்கு வங்கியை பெற்று மாற்று சக்தியாக மாறியவர் விஜயகாந்த்.

எம்ஜிஆர் கூட திமுகவின் தொடக்க காலத்தில் இருந்தே பயணித்து அந்த கட்சி 1957 பேரவைத் தேர்தலில் 15 சதவீத வாக்கு வங்கி பெற்ற போது அதில் முக்கிய பிரசார பீரங்கியாக இருந்து திமுகவின் பொருளாளராக முழுநேர அரசியல்வாதியாக திகழ்ந்தவர்.

1971 பேரவைத் தேர்தலில் திமுக 48.50 சதவீத வாக்கு வங்கியை பெற்ற நிலையில், 1973 இல் திமுகவில் இருந்து பிரிந்து அதிமுகவை தொடங்கி 1977 பேரவைத் தேர்தலில் திமுக வாக்கு வங்கியில் இருந்து கணிசமாகவும், பிற வாக்குகளையும் பெற்று 30.3 சதவீத வாக்கு வங்கியை பெற்று முதல் தேர்தலில் ஆட்சியை பிடித்தவர் எம்ஜிஆர்.

ஆனால், எவ்வித அரசியல் பின்னணியும் இன்றி பிரபல நடிகர், ரசிகர் மன்றங்களின் கட்டமைப்பு, ஈகை குணம் என முழுக்க முழுக்க தனது சொந்த பலத்தால் 8.3 சதவீத வாக்கு வங்கியை பெற்றவர் விஜயகாந்த். தீவிர தேசிய கருத்தியல், தீவிர திராவிட கருத்தியலை செய்யாமல் இரண்டையும் கலந்து அரசியல் செய்ததால் தேமுதிக அனைத்துத் தரப்பு வாக்காளர்களையும் ஈர்த்தது.

ஜெயலலிதாகருணாநிதி என இரு பெரும் ஆளுமைகள் இருந்தபோது முன்னணி நடிகர்கள் அரசியலுக்கு வர தயக்கம் காட்டிய நிலையில், துணிச்சலுடன் களம் இறங்கி மாற்று சக்தியாக உருவெடுத்தவர் விஜயகாந்த். தொடங்கிய குறுகிய காலத்திலேயே தமிழக அரசியல் அரங்கில் மிகப்பெரிய எழுச்சியையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது தேமுதிக. விஜயகாந்தை மையப்படுத்தியும், கருப்பு எம்ஜிஆர் எனும் அடைமொழியுடன் எம்ஜிஆர் பிம்பத்தை கொண்டும் தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் பிரபலமானது தேமுதிக.

பாமகவுக்கு எதிர் என்ற புள்ளியில் முதலில் அரசியலை தொடங்கிய விஜயகாந்த், பின்னர் திமுக அதிமுகவுக்கு மாற்று என்ற புள்ளியில் நகரத் தொடங்கினார். 'தமிழன் என்று சொல்லடா', 'தலைநிமிர்ந்து நில்லடா' என்ற வாசகத்தை பட்டிதொட்டியெல்லாம் பரப்பி தனது தமிழ் தேசிய கருத்தை மக்கள் மனதில் விதைத்தவர். விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான பற்றால் தனது மகனுக்கு விஜய பிரபாகரன் என பெயர் சூட்டி விடுதலை புலிகள் மீதான உண்மையான பற்றை பறைசாற்றியவர்.

எதிர்கட்சிகளுக்கு சவால் விடும்போது 'மதுரை வீரன்டா, மங்கம்மா பேரன்டா' என்றும், எதிர்கட்சிகள் விமர்சனம் செய்யுபோது 'திட்ட திட்ட திண்டுக்கல்', 'வைய வைய வைரக்கல்' என பதிலடி கொடுத்து அரசியல் மேடைகளில் கம்பீரக் குரலால் கர்ஜித்தவர் விஜயகாந்த். 2009 மக்களைத் தேர்தலில் திமுக தலைமையில் காங்கிரஸ், விசிக, அதிமுக தலைமையில் பாமக, மதிமுக, இடதுசாரிகள் என பலமான கூட்டணிகளையும் மீறி பிரதமர் வேட்பாளர் இன்றி தனது வாக்கு வங்கியை 10.3 சதவீதமாக உயர்த்தி அரசியல் கட்சிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தவர் விஜயகாந்த். எம்ஜிஆர் புகைப்படத்தை அதிமுக விளம்பரத் தட்டிகளில் ஸ்டாம்ப் அளவுக்கு ஜெயலலிதா பயன்படுத்தி வந்த நிலையில், விஜயகாந்த் எடுத்த கருப்பு எம்ஜிஆர் பிம்பத்தால், மீண்டும் எம்ஜிஆர் புகைப்படத்தை மிகப்பெரிய அளவில் ஜெயலலிதா பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளியது.

மதுரை மத்தி, மதுரை மேற்கு போன்ற இடைத்தேர்தலில் அதிமுகவுக்கு நெருக்கமான வாக்கு வங்கியை தேமுதிக பெற்றது அப்போதைய அதிமுக பொதுச்செயலர் ஜெயலலிதாவுக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால், வந்தவாசி, பென்னாகரம், திருச்செந்தூர் இடைத்தேர்தல்களில் வாக்கு சதவீதம் குறைந்ததால் கூட்டணி கட்சியாக மாற வேண்டிய நிர்பந்தம் தேமுதிகவுக்கு உருவானது. 2011, 2016 பேரவைத் தேர்தலில் அதிமுக ஆட்சிக்கு வருவதற்கும், 2021இல் அதிமுக ஆட்சி மாற்றத்துக்கும் முக்கிய காரணம் தேமுதிக என்றால் அதுவும் மிகையல்ல.

2011இல் அதிமுக,தேமுதிக கூட்டணி மிகப் பெரிய அணி என்ற தோற்றத்தை உருவாக்கி திமுகவை மூன்றாவது இடத்துக்கு தள்ளியது. அதேபோல, 2016இல் ஒரு சதவீத வாக்கு வித்தியாசத்தில் அதிமுக ஆட்சியை கைப்பற்றியது. மக்கள் நலக்கூட்டணியில் தேமுதிக இணைந்தது 5.5 சதவீத வாக்கு வங்கியை பிரித்ததால் தான் மீண்டும் அதிமுக ஆட்சி தொடர்ந்தது.

2021இல் கடைசி நிமிஷத்தில் தேமுதிகவை கூட்டணியில் இருந்து கழற்றிவிட்டதால் அதிமுகவை தோற்கடித்தே ஆக வேண்டும் என்ற புள்ளியில் திமுகவுக்கு தேமுதிக வாக்குகள் விழுந்ததே 10 ஆண்டுகளுக்கு பிறகு திமுக ஆட்சியை பிடிக்க முக்கிய காரணமாக அமைந்தது.

அந்தத் தேர்தலில் திமுக, அதிமுக கூட்டணி இடையே 5.5 சதவீத வாக்கு வித்தியாசம் இருந்த நிலையில் அதிமுக,தேமுதிக கூட்டணி அமைந்திருந்தால் 2.5 சதவீத வாக்குகள் அதிமுகவுக்கு பரிமாற்றமாகி அரசியல் திருப்பம் ஏற்பட்டிருக்கக்கூடும். மாற்று சக்தியாக உருவெடுத்து, கூட்டணி சக்தியாக மாறியபிறகு 2011 பேரவைத் தேர்தலில் இருந்தே சறுக்க தொடங்கியது. 'கிங்' ஆக இருந்த விஜயகாந்த் 2011இல் 'கிங் மேக்கர்' ஆக உருவெடுத்தார்.

ஆனால், 'கிங் மேக்கர்' ஆக இருந்த விஜயகாந்த் மீண்டும் 2016 இல் 'கிங்' ஆக ஆசைப்பட்டு மக்கள் நலக்கூட்டணிக்கு தலைமை தாங்கியது அரசியல் ரீதியாக கைகொடுக்கவில்லை. ஒருவேளை திமுக அணியில் இணைந்து 'கிங் மேக்கர்' ஆக தொடர்ந்திருந்தால் அரசியலில் மற்றொரு உச்சத்தை விஜயகாந்த் பெற்றிருக்கக்கூடும். 1985இல் அதிமுக தயவில் ஓ.சுப்பிரமணியன் (காங்கிரஸ்), 1991இல் அதிமுக தயவில் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் (காங்கிரஸ்), 1996 இல் திமுக தயவில் சோ.பாலகிருஷ்ணன் (தமாகா) போல தான் 2011இல் அதிமுக தயவில் விஜயகாந்த் எதிர்கட்சித் தலைவராக உருவெடுத்தார்.

தனித்த சக்தியாக எதிர்கட்சித் தலைவராக உருவெடுத்த கருணாநிதி, எடப்பாடி கே.பழனிசாமி போல கூட்டணி கட்சி தயவில் எதிர்கட்சித் தலைவர்களால் எதிர்ப்பு அரசியலை முழுமையாக எடுக்க இயலாது என்ற உண்மையை விஜயகாந்த் உணராமல் ஆளும் கட்சி எதிர்ப்பை தீவிரமாக கையில் எடுத்ததுதான் தேமுதிகவுக்கு தொடர் சறுக்கலுக்கான பிள்ளையார் சுழியாக மாறியது.

2014 மக்களவைத் தேர்தலில் கடைசி நிமிஷத்தில் தேசிய ஜனநாயக் கூட்டணிக்கு சென்றது தேமுதிகவுக்கு கைகொடுக்கவில்லை. 10 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக 5.5 சதவீத வாக்குகளை பெற்றநிலையில், 14 தொகுதிகளில் போட்டியிட்ட தேமுதிக 5.1 சதவீத வாக்குகளை பெற்றது மிகப்பெரிய சறுக்கலை அக்கட்சிக்கு ஏற்படுத்தியது. 2016 பேரவைத் தேர்தலில் நிர்யணய சக்தி அந்தஸ்தை பெற்ற விஜயகாந்த் மீண்டும் முதல்வர் வேட்பாளராக மக்கள் நலக்கூட்டணியில் களம் இறங்கியது அவருக்கு பின்னடைவை ஏற்படுத்தியது. இதன் விளைவு தேமுதிகவின் வாக்கு வங்கி பாஜகவை விட கீழே சென்று 2.4 சதவீதத்துக்கு அதால பாதாளத்துக்குச் சென்றது.

மக்கள் நலக்கூட்டணியில் 5 சதவீத வாக்கு வங்கியை நிரூபித்த தேமுதிவுக்கு 104 தொகுதிகள், 3.75 சதவீத வாக்கெடுத்த மதிமுகவுக்கு 28 தொகுதிகள், 1.50 சதவீத வாக்கெடுத்த விசிகவுக்கு 25 தொகுதிகள், அரை சதவீத வாக்கெடுத்த இடதுசாரிகளுக்கு தலா 25, வாக்கு வங்கியை நிரூபிக்காத தமாகவுக்கு 26 தொகுதிகள் என பொருத்தமற்ற தொகுதி பங்கீடு செய்ததும் தேமுதிகவுக்கு மிகப்பெரிய சறுக்கலாக விளங்கியது. ஜெயலலிதா, கருணாநிதிக்கு நிகராக விஜயகாந்தை மையப்படுத்தி 150 தொகுதிகளுக்கு மேல் தேமுதிகவுக்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தால் தேமுதிகவின் வாக்கு வங்கி சரிந்திருக்காது. அத்துடன், தொடர்ந்து குறைந்த விஜயகாந்தின் உடல்நலம் தேமுதிகவின் வீரியத்தை மேலும் குறைத்தது.

இத்தனை சறுக்கல்களுக்குப் பிறகும், விஜயகாந்த் மறைவு செய்தி ஜெயலலிதா, கருணாநிதிக்கு பிறகு தமிழகம் முழுவதும் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கியது மக்கள் மத்தியில் விஜயகாந்த் மீதான அபிமானத்தை காட்டுகிறது. மாநிலம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கில் சென்னைக்கு தொண்டர்கள் படையெடுத்து வந்ததை பார்க்கும்போது இப்போதும் தேமுதிக உயிரோட்டமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது. திரை உலகிலும், அரசியலிலும் சாமானியராலும் சாதிக்க முடியும் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணம் விஜயகாந்த்.

## மீண்டு எழுமா.. தேமுதிக?!


இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது,

பாமகவின் கோட்டையான விருதாச்சலத்தில் அப்போதைய பாமக எம்.எல்.ஏ. மருத்துவர் கோவிந்தசாமியை வீழ்த்தி விஜயகாந்த் வெற்றி பெற்றது அரசியல் அரங்கில் பிரமிப்பை ஏற்படுத்தியது.

கடவுளுடனும், மக்களுடனும் தான் கூட்டணி என ஓங்கி ஒலித்த விஜயகாந்த்தின் குரலுக்கு வலு சேர்க்கும் வகையில் 2009 மக்களவைத் தேர்தலில் தேமுதிவுக்கு 10.1 சதவீத வாக்கு வங்கி கிடைத்தது. 2011 பேரவைத் தேர்தலில் கூட்டணி வலையில் சிக்கிய தேமுதிக 7.8 சதவீத வாக்குகளுடன் பிரதான எதிர்கட்சி அந்தஸ்தையும் பெற்றது.

அதிலும் எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கை அடிப்படையில் திமுகவை மூன்றாவது இடத்துக்குத் தள்ளி 29 எம்எல்ஏக்களுடன் எதிர்கட்சித் தலைவரானார் விஜயகாந்த். தமிழக அரசியல் அரங்கில் திமுக, அதிமுக இடையே 1980 முதல் 2001 வரை நிர்ணய சக்தியாக விளங்கிய ஜி.கே.மூப்பனார், 1998 முதல் 2009 வரை நிர்ணய சக்தியாக இருந்த பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் ஆகியோர் போல விஜயகாந்தும் நிர்ணய சக்தி அந்தஸ்தை அடைந்துவிட்டதாக அரசியல் நோக்கர்கள் கருதினர்.

ஆனால், உள்ளாட்சித் தேர்தலில் ஏற்பட்ட மனக்குறையால் அதிமுக தேமுதிக உறவு விரிசல் அடைந்தது. குறிப்பாக சங்கரன்கோவில்



இடைத்தேர்தலுக்கு முன்பு சட்டப்பேரவையில் நடந்த விஜயகாந்த்நத்தம் விசுவநாதன் இடையிலான வாக்கு வாதம் முற்றியது. அப்போது பேரவையில் விஜயகாந்தையும், தேமுதிகவையும், ஜெயலலிதா கடும் விமர்சனம் செய்தார். தேமுதிகவின் அழிவு இப்போதே தொடங்கிவிட்டது என்றும் விமர்சித்தார்.

இதனால், திமுகவைவிட தேமுதிகவை கடுமையாக எதிர்க்கும் நிலைக்கு அதிமுக போனது. 2013 மாநிலங்களவைத் தேர்தலில் தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் வெற்றிபெறுவதைவிட, திமுக வேட்பாளர் கனிமொழி வெற்றி பெறுவதையே ஜெயலலிதா விரும்பும் நிலையை உருவாக்கியதால் தேமுதிக தோல்வி அடைந்தது.

இந்த நிலையில், விஜயகாந்தின் உடல் நிலையும் பாதிக்கப்பட்டது, அவரை மையப்படுத்திய தேமுதிகவுக்கு தொடர் சறுக்கலை ஏற்படுத்தியது. 2019 மக்களவைத்தேர்தலும் இறுதி நிமிஷம் வரை பாஜக, திமுக என ஒரே நேரத்தில் கூட்டணி பேசியது தேமுதிகவின் பிம்பத்தை முற்றிலும் சிதைத்தது. இதன் விளைவு 2019 மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட கட்சிகளில் மோசமான தோல்வியை சந்தித்தது தேமுதிக. போட்டியிட்ட 4 தொகுதிகளில் திருச்சி (15.5 சதவீதம்), வடசென்னை (13.6 சதவீதம்) தொகுதிகளில் டெபாசிட்டை பறிகொடுத்தது தேமுதிக.

இதன் பிறகு கூட 2019இல் நடந்த விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் விஜயகாந்தை பிரசாரத்துக்கு அப்போதைய அதிமுக அமைச்சர் சி.வி.சண்முகம் அழைத்துச் சென்றார். வெற்றி பெற்றதும் அதிமுக வேட்பாளர் முத்தமிழ்ச்செல்வனை நேரில் அழைத்துச் சென்று விஜயகாந்திடம் ஆசி பெற செய்தார் சி.வி.சண்முகம்.

வடதமிழகத்திலும், மதுரை, விருதுநகர் மாவட்டங்களிலும் தேமுதிவுக்கு செல்வாக்கு இருப்பதாகவே பிற அரசியல் கட்சிகள் நம்பின. இந்த நிலையில் 2021 பேரவைத் தேர்தலில் அதிமுக அணியில் தேமுதிகவை நீடிக்க செய்ய எடப்பாடி பழனிசாமி முயற்சி எடுத்தும்கூட பாமகவுக்கு குறைவான இடங்களைப் பெற முடியாது எனக் கூறி வெளியேறிய தேமுதிக, அமமுக கூட்டணியில் 60 தொகுதிகளில் போட்டியிட்டது.

இது பொருந்தாக்கூட்டணியாக மாறி தேமுதிகவை 0.45 சதவீத வாக்கு வங்கிக்குத் தள்ளியது. இந்நிலையில்தான் இப்போது தேமுதிகவின் தலைமை பொறுப்பை பிரேமலதா விஜயகாந்த் ஏற்றுள்ளார். தனிப்பட்ட முறையில் பிரசார திறமை கொண்டவர் என பிரதமர் மோடியின் பாராட்டை ப் பெற்றவர் பிரேமலதா விஜயகாந்த்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பண, பரிசு மழை கொட்டிய போதும்கூட, அதில் பொதுத்தேர்தலைவிட அதிமுக, நாம் தமிழர் கட்சிகள் தங்களது வாக்கு வங்கியை இழந்தபோதும், தேமுதிக தனது வாக்கு வங்கியை உயர்த்தியதற்கு பிரேமலதா விஜயகாந்தின் பிரசாரமே காரணம்.

இப்போது அவர் ஜெயலலிதாவை புகழ்ந்து பேசுவதை பார்த்தால் அதிமுக அணியில் தேமுதிக இணையும் என்ற தோற்றம் உருவாகியுள்ளது. வாக்கு வங்கியில் மிகவும் தேய்ந்து போன நிலையில் உள்ள தேமுதிகவை மீண்டும் தூக்கி நிறுத்துவாரா பிரேமலதா விஜயகாந்த் என்ற எதிர்பார்ப்பு கட்சி தொண்டர்களிடம் எழுந்துள்ளது.

ஒரு காலத்தில் தமிழகம் தழுவிய கட்சியாக இருந்த தேமுதிக இப்போது கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், தருமபுரி, திருப்பூர், கோவை, மதுரை, விருதுநகர் என விரல்விட்டு எண்ணக்கூடிய மாவட்டங்களில் குறிப்பாக தெலுங்கை தாய்மொழியாக பேசுவோர் மத்தியில் மட்டுமே உயிரோட்டத்துடன் உள்ளது.

தேமுதிகவை பொருத்தவரை விஜயகாந்த் மீதான நல்லெண்ணம், ரசிகர்களின் பலம் மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது. இதை வைத்துக் கொண்டு சரியான கூட்டணியை அமைத்தால் மட்டுமே தேமுதிகவை ஓரளவு முன்னுக்குக் கொண்டுவரலாம். ஆனால், பாஜக, நாம் தமிழர் போன்ற கட்சிகள் திமுகஅதிமுகவுக்கு மாற்றாக வளர முயற்சிக்கும் நிலையில் பிரேமலதாவால் தேமுதிகவின் வாக்கு வங்கியை எந்த அளவுக்கு உயர்த்த முடியும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார் ரிஷி.

## சந்திரனுக்குப்போனாலும் நாங்க இப்படித்தான்...!



லங்கா கார்னர் பகுதியில் சாலையோரத்தில் வரிசையாக நின்று சிறுநீர் கழிக்கும் பொதுமக்கள்.

## எங்க மேல தப்பு இல்லப்பா...!


டாடாபாத் சாலையில், இ.எஸ்.ஐ. அலுவலகம் முன்பு மாநகராட்சியின் “குப்பையை கொட்டாதீர்” என்ற அறிவிப்புப் பலகையின் முன்பே குவிந்திருக்கும் குப்பைகளின் மீது தனது கடமையை செய்யும் குடிமகன்!

## எங்கே செல்லும் இந்த பாதை...


லங்கா கார்னர் பகுதியில் சாலைகள் குண்டும் குழியுமாக, கம்பிகள் நீட்டியபடி ஆபத்தான நிலையில் உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

படங்கள் சதிஷ் பாபு

## சாம்பியன் கோப்பை வென்றது நாச்சிமுத்து பாலிடெக்னிக்


போட்டியில் வெற்றிபெற்ற கிரிக்கெட் அணி வீரர்களைக் கல்லூரி செயலாளர் பேராசிரியர் ராமசாமி , கல்லூரி முதல்வர் அசோக் மற்றும் உடற்கல்வித் துறை பேராசிரியர்கள் உள்ளிட்டோர் வாழ்த்தினர்.

தி கோவை மெயில்

பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையே மண்டல அளவிலான கிரிக்கெட் போட்டி பி.எஸ்.ஜி. பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி அணியானது இறுதிப்போட்டியில், சுகுணா பாலிடெக்னிக் கல்லூரி அணியினை வீழ்த்தி கோவை மண்டல அளவிலான சாம்பியன் கோப்பையை 13வது முறையாக வென்றது.

கால் இறுதிப் போட்டியில் நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி தங்களை எதிர்த்து விளையாடிய ஸ்ரீ ரங்கநாதர் பாலிடெக்னிக் கல்லூரி அணியை 62 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அரை இறுதிப் போட்டியில், கோவை சங்கர பாலிடெக்னிக் கல்லூரி அணியை 35 ரன்கள் வித்தியாசத்தில் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் கோவை சுகுணா பாலிடெக்னிக் கல்லூரி அணியை 28 ரன்கள் வித்தியாசத்தில் வென்று, கோவை மண்டல அளவிலான கிரிக்கெட் சாம்பியன் டிராபியை 13 வது முறையாக பெற்றது. இதன்மூலம் மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெற்றது நாச்சிமுத்து பாலிடெக்னிக் கிரிக்கெட் அணி.

## கோவையில் மையம் கொள்ளும் இசைப்புயல் “காதம்பரி 2024”

தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி – சன்ஸ் அறக்கட்டளை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து வரும் இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் “காதம்பரி” எனும் இசை நிகழ்ச்சி நடந்துவருகிறது.

இந்த ஆண்டு நிகழ்ச்சி வரும் ஜனவரி 4 முதல் 7ம் தேதி வரை பி.எஸ்.ஜி. மருத்துவமனை கலையரங்கத்தில் நடைபெற உள்ளது. இதற்கான செய்தியாளர்கள் கூட்டத்தில், டாக்டர் புவனேஸ்வரன், முனைவர் விஜயஜெயா, சமுதாய வானொலி இயக்குநர் சந்திரசேகரன், பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி ஆங்கிலத் துறை இணைப் பேராசிரியர் சுரேஷ், ஊடகத் தொடர்பு மேலாளர் உமா செங்கதிர் ஆகியோர் கூறுகையில்,

‘நிகழ்ச்சிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் இசைத் திறன்களை வளர்க்கும் விதமாக பி.எஸ்.ஜி. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். தொடக்க நாளில் பி.எஸ்.ஜி. மாணவர்கள் பங்கேற்கும் பஞ்சபூதம் எனும் தலைப்பில் பரதநாட்டிய நிகழ்ச்சியும், ஜனரஞ்சகம் எனும் தலைப்பில் பாடகர் பரத் சுந்தர் பங்கேற்கும் கர்நாடக இசைக் கச்சேரி நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இரண்டாம் நாளன்று பி.எஸ்.ஜி. மாணவர்களின் பரிணாமம் எனும் தலைப்பில் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் பாடகரும், நடிகருமான சி.ஜி.குமார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார். மூன்றாம் நாள் பி.எஸ்.ஜி. பப்ளிக் பள்ளி மாணவர்களின் இன்னிசையே, தமிழிசையே எனும் கர்நாடக இசை கச்சேரி நிகழ்ச்சியும், இசை மற்றும் புல்லாங்குழல் எனும் தலைப்பில் ப்ளூட் ஜெயன்ட் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நான்காம் நாள் முழுவதும் பி.எஸ்.ஜி. கலை, அறிவியல் கல்லூரி கர்நாடக இசைத் துறை சார்பில் ஷேத்திர விஜயம் எனும் தலைப்பில் கர்நாடக இசைக் கச்சேரி நடைபெறுகிறது.

மேலும், யுவா கலா ரத்னா விருதுகள் வழங்கப்பட உள்ளன. ஒவ்வொரு நாளும் மாலையில் துவங்கும் இந்நிகழ்ச்சியில் அனுமதி இலவசம்’ என்றனர்.


பி.எஸ்.ஜி. சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன், பி.எஸ்.ஜி. கலை, அறிவியல் கல்லூரியின் கர்நாடக இசைத் துறைத் தலைவர் விஜயஜெயா, பி.எஸ்.ஜி. சமுதாய வானொலி இயக்குநர் சந்தரசேகரன் உள்ளிட்டோர் விழா மலரை வெளியிட்டனர்.

## கோயம்புத்தூரில் பைக்கத்தான்


ஈட்ரைட் மில்லட் பைக்கத்தான் என்ற விழிப்புணர்வு இருசக்கரப் பேரணியை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.

தி கோவை மெயில்

சிறுதானிய ஆண்டை முன்னிட்டு கோயம்புத்தூரில் நடைபெற்ற ஈட்ரைட் மில்லட் பைக்கத்தான் என்ற விழிப்புணர்வு இருசக்கரப் பேரணியை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

சிறுதானிய ஆண்டை முன்னிட்டு அரசு சார்பிலும், பல்வேறு தனியார் நிறுவனங்கள் சார்பிலும் இந்த ஆண்டு முழுவதும் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துத் துறை, ஸ்ரீ சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இணைந்து சிறுதானியங்களின் ஊட்டச்சத்து நன்மைகளை எடுத்துரைக்கும் வகையில் ஈட்ரைட் மில்லட் பைக்கத்தான் என்ற இருசக்கர விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

பேரணியானது ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி உக்கடம், பொள்ளாச்சி வழியாக சக்தி கல்லூரியைச் சென்றடைகிறது. இதில் 15க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற துவக்க நிகழ்வில் உணவுப் பாதுகாப்புத் துறை கோவை மாவட்ட நியமன அலுவலர் தமிழ்ச்செல்வன், சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தலைவர் தங்கவேலு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தொழில்முனைவோருக்கான போட்டி

தி கோவை மெயில்

டாக்டர் என்.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரியில் தொழில்முனைவோருக்கான போட்டி வணிகக் கணினி ஆய்வகத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். இப்போட்டியில் என்.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரியில் பயிலும் அனைத்துத் துறை மாணவர்களும், எதிர்காலத்தில் தாங்கள் தொடங்கவுள்ள தொழில் முறை யுக்திகளைத் தொகுத்து காணொளிக் காட்சி வாயிலாக தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.



# அதிக சப்ளையர்களை வைத்துக்கொண்டால் செலவைக் குறைக்கலாம்!


**ராம்குமார் சிங்காரம்,**
எழுத்தாளர்,
தன்னம்பிக்கை பேச்சாளர்

> **கண்களை அகலத்திறந்து வைத்துக்கொண்டு, நாலாபுறமும் கவனம் செலுத்தி வியாபாரம் செய்வது விற்பனைக்கு முந்தைய லாபத்தை அதிகரிக்கும். இந்த தத்துவத்தை தொழிற்சாலைகளில் மட்டுமல்லாமல், அலுவலகங்களில்கூட பயன்படுத்த முடியும்.**



பொதுவாக எந்த ஒரு வியாபாரமுமே ஆரம்பிப்பது, கொள்முதலில் இருந்துதான். பொருளைக் கொள்முதல் செய்கிறபோது அந்தப் பொருளுக்குக் குறைந்தபட்சம் 3 முதல் அதிகபட்சம் 5 விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுத்து (சிறிய தொழில் செய்பவராக இருந்தால் விசாரித்து), அவர்களிடமிருந்து விலைப்பட்டியலைப் பெற வேண்டும் .

இதனால், ஒரே பொருளைக் குறைந்த விலையில் கொள்முதல் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். அதாவது, ஒரு தொழில்முனைவர் விற்பனைக்கு புதிய வாடிக்கையாளர்களைத் தேடி ஓடிக்கொண்டே இருப்பதுபோல புதுப்புது சப்ளையர்களையும் தேடிக்கொண்டே இருக்க வேண்டும்.

கொள்முதல் செய்யக்கூடிய மூலப்பொருட்களின் விலை குறைந்தாலே, நம் தயாரிப்பின் அடக்கவிலை குறைந்துவிடும். நிறுவனத்தின் லாபமும் அதிகரிக்கும். பொதுவாக நம்மில் பலர், ஒரு நல்ல சப்ளையர் கிடைத்துவிட்டால், அதில் மனநிறைவடைந்து வாழ்நாள் முழுவதும் அவரிடமே பணிகளைக் கொடுத்து அல்லது பொருட்களை வாங்கி விடுவோம்.

தரம் முக்கியம்தான் ஆனால், புதிய தொழில்முனைவோரில் யாராவது தரமான பொருளை ஆரம்ப அறிமுகத்தில் குறைவான விலையில் தந்தால் அதையும் கவனித்து வாங்குவதுதான் புத்திசாலித்தனம்.

இதற்கு, பெரும்பாலும் சந்தை நிலவரத்தைக் கண்காணித்துக்கொண்டே இருப்பது அவசியம். லாப நோக்க வியபாரத்தில் விசுவாசம் இரண்டாம்பட்சம்தான்.

ஒரு நல்ல அச்சக நண்பர் கிடைத்துவிட்டால், வாழ்நாள் முழுவதும் அவரிடமே அச்சுப்பணிகளைக் கொடுத்துவிட்டு, ‘வேலை முடிந்தது’ என இருந்துவிடக் கூடாது. இதனால் நமக்கு காகித விலை, மை விலை போன்றவை குறித்து அடிப்படை அறிவுகூட நாளடைவில் இல்லாமல் போகும். ஒருவரை நம்பி செயல்படுவதில் தவறில்லை.

ஆனால், அந்தப் பணியின் தன்மை தெளிவாகத் தெரிந்தால், முன்பு பணியைக் கொடுத்தவரிடம் பேரம் பேசினால் இன்னும் குறைந்த செலவில் தரமான சேவையைப் பெற வாய்ப்புகள் கிடைக்கும் இல்லையா..? எனவே கண்களை அகலத்திறந்து வைத்துக்கொண்டு, நாலாபுறமும் கவனம் செலுத்தி வியாபாரம் செய்வது விற்பனைக்கு முந்தைய லாபத்தை அதிகரிக்கும். இந்த தத்துவத்தை தொழிற்சாலைகளில் மட்டுமல்லாமல், அலுவலகங்களில்கூட பயன்படுத்த முடியும். எப்படி?

சென்ற மாத செலவுக் கணக்கை எடுத்துக்கொண்டு எந்தெந்த சப்ளையருக்கெல்லாம் நாம் பணம் வழங்கியிருக்கிறோம் என்ற பட்டியலைத் தயாரிக்க வேண்டும். முக்கிய மூலப்பொருள் தொடங்கி சாதாரண குண்டூசி வரை எல்லா விவரங்களையும் குறித்துக்கொள்ளுங்கள். பிறகு ஒவ்வொன்றுக்கும் குறைந்தபட்சம் மூன்று சப்ளையர்களைத் தேர்ந்தெடுங்கள்.

ஆயிரங்களில் வியாபாரம் நடக்கிறது. பத்து, இருபது ரூபாய்களில் நேரத்தை செலவழிப்பது புத்திசாலித்தனம் இல்லை என்று தோன்றுகிறதா..? நீங்கள்தான் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்கிற அவசியமில்லை. உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படையுங்கள்.

இதற்கெல்லாம் புதிய சப்ளையர்களை எங்கே தேடுவது என்ற அலுப்பு வருகிறதா..? அதற்கும் இருக்கிறது எளிய வழிகள்.

நம் நண்பர்கள், உறவினர்கள் போன்றோரிடம் வேறு தகவல் பேசும்போது பத்தோடு பதினொன்றாக இந்த விவரங்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அவசியம் நேரும்போது கூகுளில் தேடிப் பார்க்கலாம்.

இப்படித் தொடர்ந்து புதுப்புது சப்ளையர்களை அதிகரித்துக்கொண்டே இருந்தால் செலவுகளைக் குறைக்க முடியும்.

## E.T. எக்ஸலன்ஸ் விருது 2023

✍ தி கோவை மெயில்

அனிதா டெக்ஸ்காட் சார்பில் 'இ.டி. எக்ஸலன்ஸ் கோயம்புத்தூர் 2023' விருது வழங்கும் விழா நவ இந்தியாவில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ் கலந்துகொண்டார்.



கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலத்திற்கு 'பொன்விழா ஐகான் விருது' வழங்கப்பட்டது.



கே.ஜி. இன்ஃபர்மேஷன் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் அசோக் பக்தவத்சலத்திற்கு 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டது.



ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு 'எக்ஸலன்ஸ் இன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை' எனும் விருது வழங்கப்பட்டது. இதனை மருத்துவமனையின் தலைவர் மாதேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.



ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு 'எக்ஸலன்ஸ் இன் மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல்' எனும் விருது வழங்கப்பட்டது. இதனை எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் இணை நிர்வாக இயக்குநர் சுந்தர் மற்றும் முதன்மை இயக்கு அதிகாரி சுவாதி ரோஹித் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



ராவ் மருத்துவமனைக்கு 'எக்ஸலன்ஸ் இன் பெர்டிலிட்டி அண்ட் கைனக் லேப்ரோஸ்கோபி ஹாஸ்பிடல்' எனும் விருது வழங்கப்பட்டது. இதனை மருத்துவமனையின் இணை இயக்குநர் தாமோதர் ராவ் பெற்றுக்கொண்டார்.



டவுன் அண்ட் சிட்டி டெவலப்பர்ஸுக்கு (கே.ஜி. குழுமம்) 'மோஸ்ட் ட்ரஸ்டட் ரியல் எஸ்டேட் டெவலப்பர் ஆப் தி இயர்' எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

# 2023 ஆம் ஆண்டில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்கள்?



✍ தி கோவை மெயில்

இந்தியாவின் 14ஆவது பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுக் கொண்ட நாளிலிருந்தே அரசு முறை வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களில் தனிக்கவனம் செலுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 2023 ஆம் ஆண்டில் பிரதமர் மோடியின் முக்கிய சர்வதேச பயணங்கள் குறித்த விவரங்கள் வெளியாகி உள்ளன.

அதன் விவரங்கள்:

அமெரிக்கா, பிரான்ஸ், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட 11 நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு இருக்கிறார்.

**ஜப்பான், பப்புவா நியூ கினியா மற்றும் ஆஸ்திரேலியா பயணம் (மே 19 - மே 25)**

ஜப்பானின் ஹிரோஷிமாவில் நடந்த ஜி7 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டார்,

ஜி7 உச்சி மாநாட்டைத் தொடர்ந்து, பிரதமர் மோடி பப்புவா நியூ கினியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார், இது இண்டோ பசிபிக் நாட்டிற்கு இந்தியப் பிரதமரின் முதல் வருகையாக இந்த பயணம் அமைந்தது.

இதையடுத்து, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் விடுத்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி, சிட்னி சென்றார். அங்கு, பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் உடன் இணைந்து, உள்ளூர் இந்திய சமூகத்தினருடன் ஒரு சிறப்பு நிகழ்வில் உரையாடினார்.

மேலும், இந்த சமூக நிகழ்வின்போது, ஹாரிஸ் பார்க் பகுதி 'லிட்டில் இந்தியா' என அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**அமெரிக்கா மற்றும் எகிப்து (ஜூன் 20 - ஜூன் 25)**

ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் ஜில் பிடன் ஆகியோரின் அழைப்பை ஏற்று நியூயார்க் சென்றார். ஜூன் 21 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் சர்வதேச யோகா தினத்திற்கான நிகழ்ச்சிக்கு பிரதமர் தலைமை தாங்கினார். தொடர்ந்து, ஜூன் 22 ஆம் தேதி வெள்ளை மாளிகையில் அரசு வரவேற்பைப் ஏற்க வாஷிங்டன் சென்றார்.

பின்னர், எகிப்துக்கு ஜனாதிபதி அப்தெல்ஃபத்தா எல்சிசியின் அழைப்பின்பேரில், அரசுமுறைப் பயணமாக கெய்ரோவுக்குச் சென்றார் பிரதமர் மோடி.

**பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (ஜூலை 13 - ஜூலை 15)**

பாஸ்டில் தின ராணுவ அணிவகுப்பில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றார். கடந்த 2017ம் ஆண்டு அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப்க்கு பிறகு வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மரியாதையாக இந்த பயணம் இருந்தது.

பிரான்சில் இருந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபிக்குச் சென்ற பிரதமர், ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

**தென்னாப்பிரிக்கா மற்றும் கிரீஸ் (ஆகஸ்ட் 22 - ஆகஸ்ட் 26)**

ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் மோடி தென்னாப்பிரிக்கா விற்குச் சென்றது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்த பயணத்தை தயடுத்து, கிரீஸ் சென்றார் பிரதமர் மோடி. 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் கிரீஸ் சென்றது இதுவே முதல் முறையாகும். இந்த பயணம் இரு நாட்டின் கூட்டாண்மைக்கான உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியதாக அமைந்தது.

**இந்தோனேசியா (செப். 6 - செப். 7)**

கடந்த சில மாதங்களுக்கு முன்பு புதுதில்லியில் நடந்த ஜி20 மாநாட்டிற்கு சில நாட்களுக்கு முன்பு, இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் 18வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மற்றும் 20வது ஆசியான் இந்திய உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்துகொண்டார்.

**துபாய் (நவம்பர் 30 - டிசம்பர் 1)**

உலகக் காலநிலை மாற்றம் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காகப் பிரதமர் நரேந்திர மோடி டிசம்பர் மாதத் தொடக்கத்தில் துபாய் சென்றார்.

# அறம் மிக்க நாடு 'இந்தியா'

**சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி நிறுவனர் நாள் விழாவில் பேச்சு**

✍ தி கோவை மெயில்

சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியின் நிறுவனர் நாள் விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

கோயம்புத்தூர் 'சகோதரன்' அமைப்புத் தலைவர் 'இயகாகோ' என்.சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். பள்ளியில் 25 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிவரும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கும்; கடந்த கல்வியாண்டில் பத்து, பனிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும்; பொதுத் தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களைப் பெற வைத்த ஆசிரியர்களுக்கும்; அபுதாபியில் நடைபெற்ற பன்னாட்டு ரோபோடிக் போட்டியில் வென்ற மாணவர்கள், ஆசிரியர்களுக்கும்; ஜெர்மனி எர்ஃபர்டிலுள்ள கொனிஜென் லூயி ஜிம்னாஷியம் பள்ளிக்குக் கலாச்சாரப் பரிமாற்றம் நிகழ்விற்காக மாணவ மாணவியரை அழைத்துச் சென்ற ஆசிரியர்களுக்கும் சிறப்பு விருந்தினர் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

மேலும் அவர், பல்வேறு பிரிவுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு 'கலா கார்த்திகேயன்' விருதினையும், அஞ்சல் தலை சேகரிப்பிற்காக 'ஸ்ரீசேதுராமன்' விருதினையும் மாணவர்களுக்கு வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் 'இயகாகோ' என்.சுப்பிரமணியன் வாழ்த்துரையில், "தேசியத்தையும், தெய்வீகத்தையும், அறவழியைக் காட்டுகின்ற கல்வியையும் வழங்கும் அற்புதப் பணியினை செய்யும் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி நிர்வாகத்திற்கு பாராட்டுகள்.

இந்தியாவிற்கு இணையான நாடு வேறு எதுவும் இல்லை. இங்கிருக்கின்ற மொழிகளில் தோன்றிய கவிதைகள் மற்றும் இலக்கியங்களுக்கு இணையாக வேறு எந்த நாட்டு மொழியிலும் இல்லை. வாழ்க்கையில் அறம் சொல்லக்கூடிய அற்புதமான ஆன்மிக சித்தாந்தவாதிகளையும் சித்தர்களையும் கொண்ட நாடு, இந்தியாவைவிட வேறு எங்கும் கிடையாது. இந்த மண்ணில் பிறந்ததற்காகப் பெருமைப்பட வேண்டும். இங்கு கிடைக்கின்ற கல்விக்காகப் பெருமைப்பட வேண்டும். அறம் மிக்க நாடு என்றால், இந்திய நாடு மட்டும்தான். வேறு எந்த நாட்டிலும் இங்குள்ளது போன்ற அற நூல்கள் கிடையாது' என்றார்.

பள்ளி முதல்வர் உமா மகேஸ்வரி வரவேற்றார். முன்னாள் மாணவர்களான வி.மதுமிதா, டாக்டர் ஏ.எல்.விவேக் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். நிர்வாக அறங்காவலர் ராமசாமி தலைமையுரையாற்றினார். செயலர் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் வாழ்த்தினார். கல்வி ஆலோசகர் நல்லாசிரியர் டாக்டர் வெ.கணேசன் நன்றி கூறினார்.



பள்ளியின் ஆண்டு மலரினை பள்ளி நிர்வாக அறங்காவலர் கே.ராமசாமி வெளியிட, சிறப்பு விருந்தினர் 'இயகாகோ' சுப்பிரமணியன் பெற்றுக்கொண்டார். உடன், பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் உள்ளிட்ட பலர்.

## பாஜக விவசாயி அணி சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

✍ தி கோவை மெயில்

கோவை, பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை விவசாயம் மற்றும் தென்னை சார்ந்த பொருட்கள் உற்பத்தி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தேங்காய் எண்ணெய்க்கு உரிய விலை கிடைக்கவில்லை எனக் கூறி தென்னை விவசாயிகள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மேலும் தென்னை விவசாயிகளைப் பாதுகாக்க வலியுறுத்தி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசிடம் தொடர்ந்து கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக அரசு தேங்காய் எண்ணெயை ரேஷன் கடைகளில் வழங்க வலியுறுத்தி கோவை மாவட்ட பாஜக சார்பில் தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பாஜக கோவை மாவட்ட விவசாயி அணித் தலைவர் வசந்தசேனன் தலைமை வகித்தார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பாஜகவினர் பலரும் கைகளில் தேங்காய்களை ஏந்தியபடி மாநில அரசு ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெயை வழங்க வேண்டும், தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைத் தமிழக அரசும் மாவட்ட நிர்வாகமும் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முழக்கங்களை எழுப்பினர்.

# பயிற்சிப் பட்டறை

✍ தி கோவை மெயில்

வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் உணவு விடுதி மற்றும் மேலாண்மைத் துறை சார்பாக "உணவகப் பராமரிப்பில் திறன் மேம்பாடு" பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர் பெங்களூர், ராடிசன் புளூ, வீட்டுப் பராமரிப்பு மேற்பார்வையாளர் மணிகண்டன் பேசுகையில், படுக்கைகளை உருவாக்குதல், குளியலறைகள் மற்றும் படுக்கை அறைகளைச் சுத்தம் செய்தல், தூய்மையாக வைத்திருத்தல், கறை நீக்குதல், மடிப்பு துண்டுகள், போர்வைகள், உறைகள் மற்றும் உணவகங்களின் பாத்திரங்களைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விரிவாக விளக்கினார். ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளின் முக்கியத்துவம் குறித்தும் அதன் பராமரிப்பு குறித்தும் எடுத்துரைத்தார்.

# நிறம் மாறிய நதி

✍ தி கோவை மெயில்

பெருகிவரும் தொழிற்சாலைகள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்பதிலும்; ஒரு நாட்டின் பொருளாதாரம், அந்நாட்டின் தொழில் வளம் சார்ந்து இருக்கிறது என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை. அதேநேரத்தில், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் இயற்கை வளத்தைச் சீர் கெடுக்கின்றன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இயற்கைச் சூழல் தற்போது இல்லை. இன்று இருக்கும் இயற்கை வளம் வரும் காலங்களில் இருக்குமா என்பதும் சந்தேகமே?!

எடுத்துக்காட்டாக, ரஷ்யாவின் முக்கிய நதிகளில் ஒன்றான இஸ்கிடிம்கா நதி, தற்போது பீட்ரூட் சிவப்பு நிறத்தில் மாறி இயற்கை ஆர்வலர்களை மீண்டும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

இஸ்கிடிம்கா நதி இரத்த சிவப்பு நிறத்தில் மாறுவது இது முதல்முறை அல்ல. கடந்த 2020 ஆம் ஆண்டு இதேபோல் நிறம் மாறியது. தற்போது மீண்டும் நிறம் மாறியிருக்கிறது. ரஷியாவில் உள்ள பல்வேறு நதிகள் இதுபோன்று மாசுபாடு காரணமாக அவ்வப்போது சிவந்த நிறத்தில் மாறுவது தொடர்கதை யாகிவிட்டது.



தொழில் நகரமாக இருக்கும் கெமரோவோவில் தொழிற்சாலையில் இருந்து கழிவுகள் ஆறுகளில் விடப்படுகிறது. அதனால், ஆறுகளில் நச்சுக்கழிவுகள் கலந்து, நச்சு நீராக மாறி மக்களை அச்சுறுத்தி வருகிறது. இதன் காரணமாகவும், இஸ்கிடிம்கா நதி நிறம் மாறி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதற்கான, ஆய்வுகள் நடந்து வருகிறது. நீரின் நிறம் மாற்றம் காரணமாக, நதியில் வாத்துகள் இறங்க மறுக்கின்றன என அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இறைவன் நமக்கு அளித்த விலைமதிப்பில்லா அன்பளிப்பு, இயற்கை. அந்த இயற்கையை உலகம் எங்கும் காப்பாற்றுவது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

# எக்கோ ஃப்ரெண்ட்லி கட்டுமானம்: ‘புரிதல் அவசியம்’

♦ செங்கல், மணல், கற்கள், கம்பிகள், சிமெண்ட் உள்ளிட்ட அனைத்திலும் தனிக் கவனம் செலுத்தி கொள்முதல் செய்ய வேண்டியது அவசியம்.

♦ சரியான முறையில் திட்டமிட்டு வாழும் வீட்டில் அல்லது நிறுவன கட்டிடத்தில் வெளிச்சம், காற்று, போதிய இடைவெளியுடன் கூடிய அறைகள் அனைத்தும் உள்ளடக்கியது எக்கோ ஃப்ரெண்ட்லி பில்டிங்




✍ தி கோவை மெயில்

சொந்த வீடு ஒன்று கட்டி அதில் குடிபுக வேண்டும் என்பதே இந்தியர்களின் பொதுவான கனவாக உள்ளது. இன்றைய சூழ்நிலையில் அனைத்திலும் புதுமைகளை எதிர்பார்க்கும் மக்கள், வீடு கட்டுவதிலும் புதுமை விரும்பிகளாகவே இருக்கின்றனர். என்னதான் தொழில்நுட்ப வசதிகள் மேம்பட்டாலும் வீடு கட்ட தொடங்கியவுடன் பல்வேறு சந்தேகங்கள், குழப்பங்கள் எழத்தான் செய்யும்.

’கல்யாணம் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார்’ என்ற பழமொழியும் உண்டு. கடன் வாங்கி வீடு கட்டும்போதும் சரி; கட்டிய பிறகும் சரி; புலம்பும் நபர்களை நிச்சயம் சந்தித்திருப்போம் அல்லது கடந்து சென்றிருப்போம். அப்படியாக, கட்டுமானத்தில் உள்ள நுணுக்கங்கள், அதில் செலவினங்களைக் குறைக்கும் யுத்திகளைக் குறித்து விளக்குகிறார், ஆர்க்கிடெக்ட் அறிவுடை நம்பி.

சுற்றுச்சூழலுக்கு ஒத்துப்போகும் வகையில் கட்டடங்களை எப்படிக் கட்ட வேண்டும் என்பதை மட்டும்தான் இன்றைய தினத்தில் பரவலாக நாம் பேசி வருகிறோம். சுற்றுச்சூழல் மாசுபாடு, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் சார்ந்த பிரச்னைகளை எதிர்கொள்வதில் இந்தியா முன்னோடியாக இருக்கிறது என்று சொன்னால் நம்ப முடிகிறதா..? கட்டுமானத் துறையில் இதற்கான தீர்வைக் கண்டறிய முடியுமா..? என்ற கேள்விக்கான விடையை ஆராய்ந்து வருகிறோம்.



## நாங்கள் கேட்கும் முதல் கேள்வி?

பொதுவாக, எங்களிடம் கட்டுமானத்திற்காக வருபவர்கள் 10,000 சதுர அடியில் வீடு கட்ட வேண்டும் என்று சொல்வார்கள். அவர்களிடம் நாங்கள் முன்வைக்கும் முதல் கேள்வி, உங்களின் தேவைக்கு இது அவசியமானதா? உதாரணமாக, ஒரு சதுர அடி கட்டுமானத்திற்கு எத்தனை கிலோ மெட்டீரியல் பயன்படுத்துகிறோம் என்று கணக்கு எடுத்தோம் என்றால், அதற்காக அதிகம் செலவழித்திருப்போம். ஏனெனில், தரம் அல்லது பற்றாக்குறையான பொருட்களைப் பயன்படுத்தி அதிக கலவைகளைச் சேர்த்திருப்போம்.

இன்று நாம் கட்டுமானத் துறையில் பயன்படுத்தக்கூடிய மண், சிமெண்ட், கற்கள், கம்பிகள் என பெரும்பாலான பொருட்கள் குவாரி செய்து வரும் பொருட்களாகவே இருக்கிறது. இது, அதன் இயற்கை தன்மையைக் கெடுப்பதாகவே உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கூடுமானவரை கட்டுமான பொருட்களை உள்ளூரிலேயே கொள்முதல் செய்துகொள்ள வேண்டும். இது போக்குவரத்து செலவினங்களை வெகுவாக குறைத்து, ஒட்டுமொத்த கட்டுமான செலவில் சிறிய பகுதியை மிச்சப்படுத்தும்.

## எக்கோ ஃப்ரெண்ட்லி ஹோம் என்றால்?


கட்டுமானத்தில் மட்டும் எக்கோ ஃப்ரெண்ட்லி இல்லை, நாம் வாழும் வாழக்கை முறையும் சேர்ந்ததுதான் எக்கோ ஃப்ரெண்ட்லி என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

கட்டுமான பொருட்களைத் தவிர்த்து, சரியான முறையில் திட்டமிட்டு வாழும் வீட்டில் அல்லது நிறுவன கட்டிடத்தில் வெளிச்சம், காற்று, போதிய இடைவெளியுடன் கூடிய அறைகள் அனைத்தும் உள்ளடக்கியது எக்கோ ஃப்ரெண்ட்லி பில்டிங். இதில், கட்டுமானங்களைப் பொருத்தமட்டில், களிமண், மணல் மற்றும் சரளை போன்ற இயற்கையான, மூலப்பொருட்களின் கலவையை சுருக்கி, உறுதியான, ஆற்றல் திறன் கொண்ட சுவர்களை உருவாக்குவது ஆகும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடு என்பது பொதுவாக நீர் பாதுகாப்பு அமைப்புகளுடன் கூடிய தண்ணீரை சேமித்து அதனை மீண்டும் பயன்படுத்துவதாகும். இயற்கையான மழைநீரை மறுசுழற்சி செய்வதன் மூலம் உங்கள் வீட்டிற்கு பயன் படுத்த லாம்.



## மறுசுழற்சி பொருட்கள்



நமது பண்டைய காலம் தொடங்கி, முந்தைய தலைமுறையினர் வரை கட்டுமானத்தில் மறுசுழற்சி பொருட்களை அதிகம் பயன்படுத்தி இருக்கின்றனர். அதிலும், கட்டுமானத் துறையில் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்திய காலம் உண்டு. ஆனால், இன்று வளர்ந்து, வளரும் தொழில்நுட்பங்களால் ’யூஸ் அண்ட் த்ரோ’ முறையைப் பின்பற்றி வருகிறோம். இதனால், செலவுகள் அதிகரிக்கவே செய்கிறது.

கட்டுமானத்தில் பயன்படுத்தும் தரத்தில் இருக்கக் கூடிய (உதாரணமாக) கதவு, ஜன்னல், பலகைகள், மூங்கில் உள்ளிட்ட பொருட்களை வீணடிக்காமல் அதனைப் பயன்படுத்த முடியும் என்ற பட்சத்தில் அவற்றைக் கட்டுமானத்தில் உபயோகிக்கலாம். முன்னதாக, அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

## செலவைக் குறைக்க முடியுமா?

கட்டிடக் கட்டுமானத்தில் செலவைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தால், செங்கல், மணல், கற்கள், கம்பிகள், சிமெண்ட் உள்ளிட்ட அனைத்திலும் தனிக் கவனம் செலுத்தி கொள்முதல் செய்ய வேண்டியது அவசியம். கட்டிடத்தின் அஸ்திவாரம் முதல் கட்டிடம் நிறைவடையும் வரை, அதாவது, செங்கல்லுக்குப் பதில் மாற்றுக் கற்கள், பில்லர் சிலாப் அமைப்பது எனச் சின்ன சின்ன விஷயங்களின் மூலம் செலவைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர, ஒரு பகுதியில் மட்டும் செலவைக் குறைக்க முடியாது. ஆர்க்கிடெக்ட் மூலம் கட்டிடத்தை வடிவமைத்து அதற்கான மூலப் பொருட்கள் எவ்வளவு வேண்டும், சிமெண்ட் கலவை அளவுகள் என அனைத்தையும் அளவிட்டு கட்டிட வேலைகளை ஆரம்பிப்பதே புத்திசாலித்தனம்.



**அறிவுடை நம்பி**
**தலைமை கட்டிடக் கலைஞர், நம்பி+ பார்ட்னர்ஸ்.**

# நாட்டு நலப்பணித்திட்ட சேவைக்குப் பாராட்டு



பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் கல்லூரி முதல்வர் சித்ரா. உடன், தொண்டாமுத்தூர் பகுதிக் காவல்துறை அதிகாரி உள்ளிட்டோர்.

✍ தி கோவை மெயில்

இன்றைய உலகம் தொழில்நுட்பத்தில் முன்னேறுவதற்கு இணையாக, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று சமீபகாலமாகப் பலர் குரல் கொடுத்து வரும் சூழலில், தொண்டாமுத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை, அறிவியல் கல்லூரி மாணவிகளைத் தொண்டாமுத்தூர் பகுதிக் காவல்துறை, தீயணைப்புத் துறையினர் மற்றும் ரோட்டரி கிளப் ஆகியோர் இணைந்து வாழ்த்தி, கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா அவர்களிடம் பாராட்டுச் சான்றிதழை வழங்கினர்.

வலிமைமிக்க இளம்பருவத்தில் நல்ல செயல்களைச் செய்ய வழிகாட்டுவதால் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்க முடியும் என்பதற்குச் சான்றாக, அப்பகுதியில் சாலைப் பாதுகாப்பு, பொதுமக்களுக்கான மருத்துவ முகாம்கள், தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைக் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் மூலமாக மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர். சமூக அக்கறையோடு பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் மாணவிகள் செய்த நலப்பணிகளை முன்னதாகப் பலரும் பாராட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ‘சிஏஏ’ சட்டம் அப்படி என்னதான் சொல்கிறது?

✍ தி கோவை மெயில்

இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டம் எனப்படும் ‘சிஏஏ’ (Citizenship Amendment Act 2019) பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு முன் இந்தியாவிற்குள் புலம்பெயர்ந்து குடியேறிய மதச்சார்பற்ற இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான திருத்தச் சட்டம் ஆகும்.

1955 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தில், மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்கள் இந்தியாவில் 12 ஆண்டுகளுக்குமேல் வசிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.




இந்த சட்டத்தில் திருத்தம் செய்து, கடந்த 2019 டிசம்பர் 9 ஆம் தேதியன்று மக்களவையில் பாஜக அமித்ஷா அவரது முன்னெடுப்பில் பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் இந்நாள் வரை இந்த திருத்த சட்டம் அமல்படுத்தப்படவில்லை. காரணம், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக போன்ற எதிர்க்கட்சிகள் இதனை ஆதரிக்கவில்லை.

அத்துடன், மத்திய அரசின் இந்த நடவடிக்கையை இவர்கள் கடுமையாக விமர்சித்தனர். மேலும், இந்தியாவிற்குள் குடியேறிய இஸ்லாமியர்களுக்கு சிஏஏ சட்டத்தில் குடியுரிமை தரப்படவில்லை. இது அரசியல் மேடைகளில் விவாதப் பொருளானது.

இந்த நிலையில், எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு சிஏஏ சட்டத்தை அமல்படுத்திடவும், இதற்கான விதிமுறைகளை உருவாக்கும் பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் முடிந்துவிடும் என்றும் யார் நினைத்தாலும் சட்டத்தைத் தடுக்க முடியாது என்ற முனைப்பில் பாஜக உள்ளது.

இதனால், இந்தியாவில் புலம்பெயர்ந்து வசிக்கும் மக்களிடம் சிஏஏ சட்டம் அமல்படுத்தப்படுமா? இல்லையா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. அவர்களும் 2024 மக்களவைத் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர்.




**சென்ற வார தொடர்ச்சி :**

மஞ்சளின் மற்றொரு அம்சம் என்னவென்றால், அதன் வழியே சிரமம் இல்லாமல் சக்தியைக் கடத்த முடியும். சக்தியை கிரகித்துக்கொள்ளும் ஒரு நூலின் திறனை மஞ் சள் மேம்படுத்துகிறது.. மஞ் சள்தான் ஒரு நூலை சூத்திரமாக உருவாக்குகிறது. நோக்கத்தைப் பொறுத்து, பலவகையான சூத்திரங்களை நம்மால் உருவாக்க முடியும். அதை எளிமையான வழிகளில் அல்லது அதிநவீன வழிகளில் செய்யமுடியும். நோக்கத்திற்கு ஏற்றவகையில் செயல்படுவதற்காக, ஒருகுறிப்பிட்ட முறையில் அதைத் தயாரிக்கவேண்டும். உதாரணத்திற்கு ஒரு மங்கல சூத்திரம் என்பது இரண்டுபேரை இணைப்பதற்காக உருவாக்கப்பட்டது.

மங்கல சூத்திரத்தின் முக்கியத்துவம்

இந்தியாவில், திருமணம் நடத்துவதன் பின்னணியில் ஒரு முழுமையான விஞ்ஞானம் இருந்தது. இரண்டுபேருக்குத் திருமணம் செய்யப்படுவது என்பது இரு குடும்பங்கள் அல்லது இரண்டு உடல்களின் பொருத்தம் என்பதாக மட்டும் இல்லாமல், இருவருக்கும் இடையில் ஒரு ஆழமான சக்திநிலையிலான பொருத்தமாகப் பார்க்கப்பட்டது. பெரும்பாலான நேரங்களில் திருமணம் செய்யும் இருவரும் திருமணநாளன்று வர சந்திக்காமலே கூட இருந்திருப்பார்கள். ஆனால் அது ஒரு பொருட்டாக இருந்ததில்லை, ஏனென்றால் இருவரிடமும் பொருந்தக்கூடிய விஷயங்களை, அவர்களைக்காட்டிலும் நன்றாக அறிந்திருந்த வேறொருவரால் பொருத்தம் பார்க்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

தம்பதிகள் இணையும்போது மங்கலசூத்திரம் தயார் செய்யப்பட்டது. ”மங்கலசூத்திரம்” என்றால் ”மங்கல நாண்என்பது பொருள். இந்த மங்கலநாண் தயார் செய்வது ஒரு விரிவான அறிவியல் சார்ந்தது. சில பருத்தி இழைகளை எடுத்து, அதற்குக் குங்குமம் மற்றும் மஞ்சள் பூசி, குறிப்பிட்ட வகையில் சக்தியூட்டப்பட்டது இந்த மங்கல நாண் எப்படித் தயார்செய்யப்படுகிறது என்றால்,அது கட்டப்பட்டுவிட்டால், அவர்களின் வாழ்நாள் முழுதும் மற்றும் அதைக் கடந்தும் செயல்பட்டது. ஒரே தம்பதியினர் பல பிறவிகள் இணைந்திருப்பதற்கு விழிப்புணர்வுடன் தேர்வு செய்த சூழல்களும் இருந்துள்ளன.

ஏனென்றால் இருவரையும் உடல் நிலையில் அல்லது உணர்ச்சி நிலையில் மட்டுமல்லாமல், அவர்களை ஒன்றாக இணைப்பதற்கான வழிகளைப் பயன்படுத்தினர். தம்பதிகளின் நாடிகள் (சூட்சும சக்தி ஓட்டங்கள்) இணைத்துக் கட்டப்பட்டன.

உடல், மனம், மற்றும் உணர்ச்சியின் நிலையில் நீங்கள் என்ன செய்தாலும், அது மரணத்துடன் முடிந்துபோகிறது. ஆனால் சக்திநிலையில் நீங்கள் செய்வது நீடிக்கிறது. இதில் மறுபரிசீலனை செய்யும் கேள்வியே எழவில்லை, ஏனெனில் என்ன செய்யவேண்டும் என்று அறிந்தவர்களால், மிகவும் ஆழமான ஏதோஒன்று, மக்களின் புரிதலுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று இணைத்துக் கட்டப்பட்டது. இன்றைக்கும்கூட என்ன செய்யவேண்டும் என்று அறியாதவர்களால், அதே செயல்முறை செய்யப்படுகிறது. அதற்கு அர்த்தம் ஏதும்இல்ல



ஏனென்றால் அதன் பின்னணியில் உள்ள விஞ் ஞானம் காணாமல் போயிருக்கிறது. மங்கல சூத்திரத்தைப் பயன்படுத்தி, ஒரு குறிப்பிட்ட வழியில் இரண்டு உயிர்களை இணைத்துக் கட்டினார்கள். இந்தச் சூழலில், அந்த இரண்டுபேரும், ”இவர் என்கணவராகவோ அல்லது மனைவியாகவோ இருக்கவேண்டுமா, வேண்டாமா?” என்று சிந்திக்கும் கேள்விக்கே இடமில்லை. இந்தக் கேள்வி எழுவதில்லை. உறவு நிலைதொடர்கிறது. இது மரணத்துடன் கூட முடிந்துப்போவதில்லை. இந்தியாவில் இப்படிப்பட்ட பலதம்பதிகள் உள்ளனர். அவர்களுள் யாரேனும் ஒருவர் இறந்தால், அடுத்தவர் ஆரோக்கியமாக இருந்தாலும் கூட, ஒரு சிலமாதங்களுக்குள் தனது இணையைப் பின்தொடர்கிறார். ஏனெனில் அவர்களின் சக்திநிலைகள் இணைத்துக் கட்டப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

இரண்டு மனிதர்கள் ஒருவராக வாழும் அளவுக்கு நீங்கள் வேறொரு மனிதருடன் பிணைக்கப்பட்டிருந்தால், அதுவாழ்வதற்கான அற்புதமானவழி.

அது ஒரு உச்சபட்ச சாத்தியம் இல்லை, ஆனால் அது வாழ்வதற்கான ஒரு அழகானவழியாக இருக்கிறது.

தொடரும்...

## AIMS hosts session on financial analysis

The Covai Mail

In a novel initiate that portrayed a brief glimpse into the emerging field of Financial Analytics in the contemporary business world, the Association of Indian Management Schools hosted a session under the "Inspiring Young Leaders" series. The event featured Prof. Debarghya Bagchi, Faculty Member – ICFAI Business School Kolkata. Prof. Bagchi delivered an incisive session on "A brief perspective on Financial Analytics in real life", aimed at sensitizing the student community to the emerging and dynamic role of Financial Analytics in Business decision making.

He discussed at length about the nature of Financial Analytics, its utility in the Business Decision making process and how the business dynamics have changed drastically in the past few years, with leading organizations embracing it to gain competitive advantage. The session was supplemented with select hands-on demonstration of Financial Analytics applications using MS Excel.

The session was moderated by Dr. Samprit Chakrabarti, Dean (Academics), ICFAI Business School Kolkata.

## NSE operationalizes Investors Service Centre

The Covai Mail

In order to cater to the needs of investors of securities markets in the states of Madhya Pradesh, Tamil Nadu, Rajasthan, Punjab and West Bengal, SEBI along with stock exchanges NSE and BSE has established an "Investor Service Centre" at Bhopal, Coimbatore, Jabalpur, Jodhpur, Ludhiana and Siliguri.

These Investor Service Centre managed by NSE was operationalized recently The centre services query resolution, complaint resolution and necessary assistance in filing complaints in SEBI Scores Portal and the Smart ODR Portal.

Shri Ashishkumar Chauhan, NSE MD & CEO, said, "The Investor Service Centre will facilitate resolution of complaints of investors against listed corporate entities and other registered intermediaries in the securities market and will also facilitate conducting of investor awareness programs in the states."

ISC centres in Bhopal, Coimbatore, Jabalpur, Jodhpur, Ludhiana and Siliguri will be centres of learning, interaction and knowledge sessions around all the investment related products and queries like Mutual Funds, Exchange Traded Funds, Sovereign Gold Bonds, Real Estate Investment Trust (REITs), Infrastructure Investment Trust (InvITs), etc.

## Amway India Introduces Skin Nutrition Serum

The Covai Mail

On 28 December, Amway India, one of the leading FMCG direct-selling companies, introduces Artistry Skin Nutrition Vitamin C+ HA3 Daily Serum.

According to Amway, This daily 'hero serum' provides enhanced hydration for brighter, radiant skin and a visibly healthy, youthful glow and also safe with all skin types.


To Advertise in THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com



THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.


# PSGCAS organises alumni meet



*Members of the association and PSGCAS College Principal Brinda plant a sapling in the college campus as part of the Alumni Reunion event.*

The Covai Mail

PSGCAS organized alumni meetings with the Department of Environmental Science, PSG College of Arts and Science organized an alumni reunion at the college premises for the batches from 1985 - 2023.

The function began with a Tree Plantation, Prayer Song, and Lighting of Kuthuvizhakku. Dr. G. M. Dwarakanath, an alumnus welcomed the gathering. Three retired faculty members were honored. Felicitation address was given by Dr. T. Kannaian, Secretary,

The alumni members donated an LCD Projector to the Environmental Science department. Financial Assistance of Rs. 750/- each was provided to the two best-performing students.

The alumni members also contributed a sum of Rs. 1,00,000/- towards the Alumni Platinum Jubilee Auditorium. 105 alumni attended the reunion.

## CREDAI organises Vendor Meet




*V. Balakrishnan, IPS, Commissioner of Police while addressing the meet*

The Covai Mail

CREDAI Coimbatore organised "CONNECT+ 1.0" a Vendor Round Table Meet recently with the presence of V. Balakrishnan, Commissioner of Police as chief guest.

"This initiative which is a platform for connecting innovative Building Materials and Service Providers in the industry with Developers is first of its kind in South India" said Gugan Ilango, President CREDAI Coimbatore.

Several innovative product manufacturers and Purchase Managers of several property developers participated and exchanged ideas.

V. Balakrishnan, IPS, Commissioner of Police complemented CREDAI Coimbatore for organising this unique event. He stated that Coimbatore one of the fastest growing cities in the country has been a forerunner in several fields such as Science & Technology, Education, industry and construction. While the rest of the world has been suffering from slowdown and recession, India has been able to have steady growth rate, thanks to the dynamic entrepreneurs in the country. Construction sector is very closely connected with the rest of the economy.

## GKNM successfully treats 7-year-old with rare Thyroid Cancer



*In an extraordinary case of medical excellence, The G. Kuppuswamy Naidu Memorial Hospital successfully conducted a rare thyroid cancer. The 7-year-old native of Ramanathapuram was referred to the hospital after all other treatments failed at the Government Hospital in his hometown. Owing to his financially impoverished background, the patient was treated under the CSR grant from Carborundum Universal Limited (CUMI). With this achievement, GKNM hospital continues to be the cornerstone of excellent and quality healthcare in Coimbatore.*

# PARK COLLEGE Hosts Coding Event

The Covai Mail

Park College of Engineering and Technology's Freshman Engineering Department conducted "Fresher's CodeWar V1.0", a unique coding event, exclusively for First-Year Engineering students from Tamil Nadu. The main aim of the event was to provide a stage for students to exhibit their coding skills, preparing them to overcome the challenges of a competitive future environment.



*Park Institutions CEO Anusha Ravi inaugurates the event by lighting the lamp.*

The inauguration of the event took place at the auditorium in Kaniyur campus. The function was presided by Dr. Anusha Ravi, CEO, Park Instituions. Dr. Prabhu Kalaiselvan, Director, Deloitte, Coimbatore participated as the Chief Guest. 950 students from various colleges in Tamil Nadu registered for this event. Dr. Lakshmanan D, Principal, Park College of Engineering and Technology welcomed the gathering.

Dr. Anusha Ravi during her Presidential speech, remembered her experience in setting up Wi Fi Internet in the plane while working in a project at Air Bus, she mentioned that computer and coding is inevitable. Technology keeps changing hence grab everything and learn every new technology.

Before concluding her speech she advised students to be proud of themselves, to always think bigger and to provide solution for problems as an Engineer.

The Chief Guest Dr. Prabhu Kalaiselvan, in his speech, presented three key things for success: to be aware of everything, to be adaptable and to be agile. He advised students to have clear vision and plan for execution. Speaking on the importance of time, he added that it was the biggest asset for a human being and hence should be spent wisely. He also encouraged students to be brave in taking any steps in career.

The winners of the event were awarded with cash prize and certificate. Dr. Anusha Ravi, gave away the certificates and congratulated the winners.

# NGPCAS organises National Conference

The Covai Mail

Department of Commerce with Professional Accounting and Management Studies, Dr. N. G. P. Arts and Science College organized a National Conference on National Education Policy 2020: Challenges and Opportunities for Higher Education Institutions in India sponsored by ICSSR, New Delhi in the college premises.

The event featured keynote speakers, panel discussions, and research presentations fostering a vibrant exchange of ideas and knowledge.

Distinguished speakers included Dr. V. Raghavendran Venugopal, Professor and Controller of examinations, Adani University, Ahmedabad, Gujarat; Dr. P. Natarajan, Professor and Head Department of Commerce, Pondicherry University, Pondicherry and Dr. Kamalaveni, Associate Professor, Centre for Women's Studies, Pondicherry University, Pondicherry.

Around 500 participants from more than 50 institutions all over India participated in the conference, around 40 papers had been presented through hybrid mode, with 150 papers published in the conference proceedings with ISBN numbers.

## Rotary Club of Coimbatore organizes flood relief



*Rotary Clubs of Coimbatore has sent relief goods worth Rs.45 lakh to the flood affected areas.*

The Covai Mail

Rotary Clubs of Coimbatore Region were actively engaged in providing relief materials to the flood-affected areas in Tuticorin, Tirunelveli & Tiruchanthur districts.

The team coordinated with their counterparts and based on their immediate requirement, sent four trucks of relief materials as two separate consignments.

Each of the consignments consists of 1250 kits and each kit contains 37 different items including clothes, provisions, and basic sanitary materials which will help them to sustain for about a fortnight.

The cost of each kit is Rs 1800. The total value of the relief materials was Rs 45 Lakhs. This was flagged off by District governor Rtn TR Vijaykumar along with DGN Rtn Chella Ragavendran and District Director Rtn S Gokulraj.

# FPTAI organises 62nd AGM

The Covai Mail

The Federation of Paper Traders Association of India (FPTAI) successfully concluded its 62nd Annual General Meeting and Conference on 28.12.2023 in Delhi. The event brought together key stakeholders, industry leaders, and members of the paper trading community to deliberate on the challenges and opportunities shaping the paper industry.

During the Annual General Meeting, the FPTAI discussed strategic initiatives, highlighted key achievements, and outlined plans for the future. The association reaffirmed its commitment to promoting sustainable practices, fostering collaboration among members, and addressing pertinent issues impacting the paper trading sector. In addition, the event saw the induction of the new President Dalip Bindal who will take over the reins from Aseem Bordia. It witnessed enthusiastic participation from traders across the country who made the event a grand success.

Founded in 1953, the FPTAI acts as a bridge between the government and traders to ensure that their voices and concerns are heard at all times.


It aims to promote paper as a sustainable source for all forms of communication, branding, advertising, packaging, hygiene, and keeping records. The organization also conductance trade delegations with countries like Germany, Thailand, Indonesia, South Korea, Vietnam, Japan, and China.

The Association works tirelessly towards safeguarding the rights of the traders, and their interests and for the overall betterment of the relationship of all parties involved.

# ITMF Chief raises concerns in global textile value

The Covai Mail

Dr. K. V. Srinivasan, the newly elected President of International Textile Manufacturers Federation (ITMF) in a release shared the findings of ITMF's latest Global Textile Industry Survey.



Dr. K. V. Srinivasan

It revealed that weakening demand, inflation, geopolitical issues, raw material price volatility, steep increase in energy charges, shortage of labour and rising interest rates are the major root causes for the slowdown of the global textile industry. Dr. Srinivasan's recommendation to the Governments in India are to stall the shortsighted policies relating to raw materials, power, labour, and new investments until the industry revives.

He has opined that one-year moratorium for payment of loans, conversion of short-term loans into long term loans and extending additional working capital are some of the financial relief measures urgently required to prevent the textile units becoming NPAs and avoid closures throwing several lakhs of people out of jobs.

## Park Global School celebrated Christmas

The Covai Mail

Park Global School celebrated Christmas with joy and enthusiasm. The primary grade children performed a wonderful skit on the birth of Jesus Christ. It was followed by dances and Carol singing. The children sang with liveliness and in high spirits.

Dr Anusha Ravi, CEO, Park Institutions was the chief guest for the celebration. She spoke about gratitude and loving and caring for others to the children. The students had a gala time with Santa Claus moving around and distributing sweets to the students.

A huge Christmas cake was cut by our CEO and distributed to the children.







Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan